## அதிகாரம் 21

# ஈசாக்குக்கும் இஸ்மவேலுக்கு மிடையிலான இறுக்கம்

21ம் அதிகாரத்தின் முதல் பகுதியானது, வாக்குத்தத்தத்தின் குமாரனைச் சுற்றிலும் வலம் வருகிறது. ஒரு நீண்ட கால காத்திருத்தலுக்குப் பின், ஈசாக்குடைய உதயமானது, ஆபிரகாம் மற்றும் சாராள் வீட்டினில் மகிழ்ச்சியைக் கொண்டு வந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. எப்படி இருந்தாலும், கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறப் போவதைப் பார்க்கும் கரிசனையில் அவர்கள் இருந்தார்கள், ஏனென்றால் சாராளுடைய வேலைக்காரி ஆகார் மூலம் அவனது குமாரன் இஸ்மவேலினால் ஏற்கெனவே அவன் ஒரு தகப்பன் ஸ்தானத்தை பெற்றிருந்தான்.

அதிகாரத்தின் பிந்திய பகுதியானது, ஆபிரகாம் மற்றும் பெலிஸ்திய ராஜா அபிமெலேக்குப் பற்றிய ஒரு வித்தியாசமான சரித்திரத்தில் கவனம் செலுத்தி எடுத்துரைக்கிறது. இரு மனிதர்களும், ஒருவருக்கொருவர் உபசாரம் செய்யவும் மற்றும் அவர்களது பின்வரும் தலைமுறையினர் உண்மையுடனும் மற்றும் அன்புடனும் இருக்க வேண்டும் என்ற ஒரு உடன்படிக்கையை பெயர்செபாவிலே செய்து கொண்டார்கள்.

### ஈசாக்கின் பிறப்பு (21:1-7)

**1கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில் கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார். 2ஆபிரகாம் முதிர்வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, தேவன் குறித்திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். 3அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராள் பெற்ற குமாரனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டான். 4தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே, ஆபிரகாம் தனக்குத் தேவன் கட்டளையிட்டிருந்தபடி அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினான், 5தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாம் நூறுவயதாயிருந்தான். 6அப்பொழுது சாராள்: தேவன் என்னை நகைக்கப்பண்ணினார்; இதைக்கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள். 7சாராள் பிள்ளைகளுக்குப் பால்கொடுப்பாள் என்று ஆபிரகாமுக்கு எவன் சொல்லுவான்?**

**அவருடைய முதிர்வயதிலே அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றேனே என்றாள்.**

**வசனம் 1.** ஆபிரகாமும் சாராளும் ஏறத்தாள இருபத்து ஐந்து வருடங்களாக அவர்களுடைய வாக்குத்தத்தத்தின் பிள்ளைக்காக காத்திருந்த பிறகு, **கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள் பற்றிய குறிப்பை எடுத்தார்**. எபிரெய வார்த்தையில் פָּקַד (*paqad*, பகட்) என்பது “வருகை” என்று பொருள்படும்படியாகவும், அதுவே “பற்றிய குறிப்பை எடுத்து” என்று மொழிப்பெயர்ப்பின் ஒரு வெளிப்பாடாய் இருக்கிறது. விவிலியத்தில் இயற்கையிலும் மற்றும் மனித காரியங்களிலும் கர்த்தரின் தலையீட்டின் நோக்கம் பற்றி தெரிவிப்பது, ஒரு பொதுவான உருவகமாய் இருக்கிறது. சில நேரங்களில், 50:24, 25; யாத்திராகமம் 4:31; ரூத் 1:6; சங்கீதம் 8:4ல் பார்ப்பது போல, அவரது சந்திப்பானது கிருபை நிறைந்த ஒன்றாயும் மற்றும் நன்மை பயக்கக் கூடியதாயும் உள்ளதுடன், வேறு சமயங்களில், பத்துக் கட்டளைகளில் அவருடைய வார்த்தையின் எச்சரிப்பானது விளக்கப்பட்டுள்ளதைப் போல ஒரு சரியான நியாயத்தீர்ப்புமாய் அது உள்ளது (யாத். 20:5; உபா. 5:9). தேவன் சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்று சொல்லியிருந்ததும் (ஆதி. 17:19; 18:10), மற்றும் இப்பொழுது **தேவன் அவருடைய வாக்குத்தத்தின் படியே** [அவளுக்கு] **செய்தார்**. ஒரு பெரிய அற்புதத்தினால் தேவனுடைய வாக்குத்தத்தமானது நிறைவேற்றப்பட்டது என்பது இந்தப்பத்தியின் முக்கியத்துவ மாயிருக்கிறது.

**வசனம் 2.** அன்னாள் (1 சாமு. 2:21), எலிசபெத் (லூக். 1:68) மற்றும் சாராள் ஆகிய பெண்களை உள்ளடக்கி யேகோவா சந்தித்ததன் விளைவாக அவர்கள் கர்ப்பவதியாகியும் மற்றும் குழந்தைகளையும் பெற்றார்கள் என்பதன் பயன்களை விவிலியம் வெளிப்படுத்துகிது. இருந்த போதிலும், பல தெய்வங்களாக உள்ள தேவர்கள் பாலியல் உறவிற்காக பெண்களை சந்தித்து, தெய்வீக தந்தையாக இருந்து வந்த குழந்தைகளைப் போல, இந்த திட்டம் இருக்கவில்லை. அப்படி அல்லாமல், கர்த்தர் மலடியாயிருக்கும் பெண்களுக்கு அவர்கள் கருத்தரிக்குமாறு அநுக்கிரகம் செய்துள்ளார் என்ற அர்த்தத்துடன், இது ஒரு சொல்லின் வடிவமாக இருக்கிறது. **ஆபிரகாம் முதிர் வயதாயிருக்கையில், சாராள் கர்ப்பவதியாகி, அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்** என்று 21:2ல் சொல்லியுள்ள இந்தக் கருத்து முக்கியத்துவமாய் உள்ளது. இந்த விஷயத்தில், கர்த்தருடைய வருகையானது, கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவருக்கும் புத்துணர்வு கொடுப்பதாய் இருந்தது. ஏனென்றால் அவர்களுடைய வயது முதிர்வினாலும், மற்றும் இனப் பெருக்கத்துக்கான வயதையும் கடந்து நீண்ட காலம் ஆகி விட்டதும் ஆகும் (ரோமர் 4:19). இந்தக் காரணத்தினால், வயது முதிர்ந்த கோத்திரத் தலைவனுக்கு (தகப்பனாக)

சாராளின் கர்ப்பத்தின் கனியின் மூலம் “ஒரு குமாரன்” பிறந்தான் என்பதை உரை முக்கியத்துவப்படுத்துகிறது. வாக்குத்தத்தத்தின் பிள்ளையின் பிறப்பானது, **தேவன் அவனோடே பேசினபடியே குறித்த காலத்திலே நடந்தேறியது என்பதும் கூட குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது** (17:21; 18:14 பார்க்க).

**வசனம் 3. ஆபிரகாம்** இதற்கு முன்னால் இஸ்மவேல் (ஆதி. 16:15) என்று பெயரிட்டதைப் போல, இதற்கு முந்தின வருடத்திலே தேவனுடைய கட்டளையின் மறு மொழியாக **சாராள் வழி வந்த அவனுடைய குமாரனுக்கு** இப்பொழுது பெயரிட்டான். இந்தக் குழந்தை கருவில் உருவாகும் முன்பே கூட, தேவன் தேர்ந்தெடுத்த **இந்த குமாரன், ஈசாக்கு** (“அவன் நகைத்தான்”) **என்ற பெயரால்** அவனால் அழைக்கப்பட்டுள்ளான் (17:19). ஆபிரகாம் மற்றும் சாராள் ஆகிய இருவரும் அவர்களுடைய முதிர் வயதில் ஒரு குழந்தை இருக்கும் என்ற வாக்குத்தத்தத்தை நம்பாமல் அவிசுவாசத்தினால் நகைத்தார்கள் என்பதினால், இந்தப் பெயரானது சரியானதாய் உள்ளது (17:17; 18:12).

**வசனம் 4.** கோத்திரத் தலைவன் ஈசாக்கினுடைய பிறப்பின் செய்தியைக் கேள்விப்பட்டவுடன், அவனுடைய பாகத்திற்கு அவனிடமிருந்து அளவிலா சந்தோஷத்தை உணர்ச்சி வசப்பட்டு வெளிக்காட்டும்படியாக எந்தவித செயலும்; இருந்ததாக உரை நூல் பதிவு செய்யவில்லை. இது அவனுடைய நீண்ட கால, மாயையான கனவாக பார்ப்பதற்கு இருந்ததினால், அவனுக்கு அந்த மாதிரியான ஒரு எதிர்வினை இருந்திருக்க வேண்டும். தேவன், குறித்த காலத்திலே ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற உண்மையுள்ளவராய் இருந்ததைப் போல, **ஆபிரகாமும் தேவன் அவனுக்கு கட்டளையிட்டபடியே அவனுடைய குமாரன் ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணுவதில் அவன் நேர்மையானவனாய் இருந்தான்.** இதில், மோசே பிற்காலத்தில் அவனது குமாரனுக்கு விருத்தசேதனம் பண்ணுவதை அவன் வயது முதிரும் வரை தள்ளிப் போட்டதைப் போல் (யாத். 2:21, 22; 4:24-26) கோத்திரத் தலைவன் செய்யவில்லை.

**வசனம் 5.** “நூறு வயதான ஒரு மனிதனுக்கு குழந்தை பிறக்குமா?” ஒரு வருடத்திற்கு முன்பாக இந்த கேள்வியை **ஆபிரகாம்** கேட்டான் (17:17), அதற்கு பதிலும் கிடைக்கப் பெற்றான். இயற்கையான ஒரு பார்வையின் நுட்பத்தில், எது நடக்க முடியாதோ, அது தேவனுடைய வல்லமையினால் உண்மையாகவே நடந்தது. முற்பிதாவின் **குமாரன் ஈசாக்கு பிறக்கும் போது, அவன் நூறு வயது உடையவனாய் இருந்தான்.**

**வசனம் 6. சாராளுக்கு** பிள்ளை பிறந்த உடனே, தேவன் அவளுக்கு என்ன செய்தார் என்பதைப் பற்றி அவளிடம் இருந்து மகிழ்ச்சியின் கவிதை வெடித்தது. **தேவன் என்னை நகைக்கப் பண்ணினார்; இதைக் கேட்கிற யாவரும் என்னோடே கூட நகைப்பார்கள்** என்று சாராள்

சொன்னாள். இங்கே, “ஈசாக்கு” என்ற பெயருடன் உள்ள வார்த்தை ஜாலங்களை ஒரு நாடகமாக காண்பிக்கிறாள். முன்பு, இந்தப் பெயர் அவிசுவாசத்தினால் வந்த நகைப்புடன் சம்பந்தப்படுத்தி இருந்தது (17:17-19; 18:12-15). இப்பொழுது, அவள் நகைப்பின் அளவுக்கு மீறிய வளத்தின்; அனுபவத்துடனும், மற்றும் ஒரு வயதான மூதாட்டிக்கு ஒரு குழந்தை பிறந்தது என்ற உண்மைக் கதையைக் கேட்கிற யாவரும் “என்னைப் பார்த்து” என்றில்லாமல் அவளுடனே கூட நகைப்பார்கள் என்று அவள் நம்புவதால், இந்த வாக்குமூலத்தில் அவளுடனே கூட என்று சொல்வது சில அர்த்தத்துடன் சொல்லப்பட்டுள்ளது. இந்த சூழலில், உட்பொருளை வெளிப்படுத்தும் ஒரு நகைப்பின் கருத்தானது, முற்றிலும் இடம் மாறி இருக்கிறது. இரண்டு வயது முதிர்ந்த மக்களைப் பெற்றோர்கள் ஆக ஆக்கின தேவனுடைய பலத்த செய்கைகளை பயபக்தியுடன் எண்ணி, சாராள் வெளிப்படையாக களிகூர்ந்து கொண்டிருந்தாள்.[1]

**வசனம் 7.** இத்துடன், ஈசாக்கின் பிறப்பானது, சாராளுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியை கொண்டு வந்ததாக அவள் தொடர்ந்து அறிவிக்கிறாள். அவளுடைய உணர்வுகளின் வெறுமையும், மற்றும் கருத்தரிக்க இயலாமையின் மீதுள்ள விசுவாசமில்லா மனக்கசப்பிற்கு பதிலாக, அவளது தாய்மையின் மகிழ்ச்சியானது **ஆபிரகாமும் சாராளும் குழந்தைகளைப் பேணுவார்கள் என்று யாரால் தான் சொல்ல முடியும்?** என்ற ஒரு ஆச்சரியத்துடனான கேள்வியாக அவளுக்கு எழும்பியுள்ளது. இந்தக் கேள்வியானது ஒரு எதிர்மறையான ஒரு பதிலைத் தரும்படி எதிர்பார்ப்பதாய் இருந்த போதிலும், “சாதாரண சூழ்நிலைகளில் ஆபிரகாமிற்கும் சாராளிற்கும் இப்போது தான் ஒரு குமாரன் பிறந்தது என்றும், மற்றும் அவனைப் பேணிக் கொண்டிருந்தார்கள் என்ற செய்தியை எடுத்துச் செல்ல ஒருவரையும் எதிர்பார்க்க முடியாது.” உண்மையில் கோத்திரத் தலைவன் மற்றும் அவனது மனைவி ஆகிய இருவருக்கும் இம்மாதிரியான ஒரு வாய்ப்பு குறித்து தேவன் மீதுள்ள அவிசுவாசத்தினால் ஏற்கனவே அவர்கள் வெளிப்படுத்தி யிருந்ததால், அவர்களுடைய முதிர் வயதில் ஒரு குழந்தை இருக்கும் என்ற யோசனை கூட மிகவும் நம்பத்தகாததாய் காணப்பட்டது. எனினும், “நடக்கக் கூடியதாயினும் முடியாது” என்பது நடந்ததாலும், மற்றும் **அவருடைய முதிர் வயதிலே அவருக்காக ஒரு குமாரனை நான் சுமந்திருக்கிறேன்** என்று சாராள் ஆச்சரியப் பட்டாள்.

## சாராளின் பொறாமை (21:8-14)

**8பிள்ளை வளர்ந்து, பால் மறந்தது; ஈசாக்கு பால் மறந்தநாளிலே ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணினான். 9பின்பு எகிப்து தேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன்**

**பரியாசம்பண்ணுகிறதைச் சாராள் கண்டு, [10]ஆபிரகாமை நோக்கி: இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்; இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்திரவாளியாயிருப்பதில்லை என்றாள். [11]தன் மகனைக்குறித்துச் சொல்லப்பட்ட இந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருந்தது. [12]அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி: அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம்; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்; ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள். [13]அடிமைப் பெண்ணின் மகனும் உன் வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாக்குவேன் என்றார். [14]ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, ஆகாருடைய தோளின்மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து, அவளை அனுப்பிவிட்டான்; அவள் புறப்பட்டுப்போய், பெயர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள்.**

ஈசாக்கின் பிறப்பானது, ஆபிரகாமிற்கும், சாராளிற்கும் எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. இருந்த போதிலும், வீட்டில் உள்ள ஒவ்வொருவராலும் அவன் வரவேற்கப்படவில்லை.

**வசனம் 8.** வயதான கோத்திரத் தலைவனும் அவனது மனைவியும் வாக்குத்தத்தத்தின் அவர்களது **பிள்ளையானது பால் மறக்கும்** வரையிலும், அவன் வளர்வதை கவனித்தார்கள். அந்த நாளிலே **ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணினான்** பழங்கால கிழக்குக்கு அருகாமையில் உள்ள இடங்களில், ஒரு குழந்தையின் பால் மறக்கும் காரியமானது ஏறத்தாள மூன்று வயதாய் இருக்கும் போதும், மற்றும் அதை இணைத்து, அது ஒரு கொண்டாட்டமாயும் இருந்துள்ளது.[2]

**வசனம் 9.** இந்த நிகழ்ச்சியில், இந்த கொண்டாட்டமானது சிறிது காலத்திற்கேயாயினும், **சாராளுக்கும் ஆகாருக்கும்** இடையிலான பழைய விரோதமானது மறுபடியும் ஒளிவீசியதால், அவளுக்கு இதைக் கெடுத்து விட்டது. பதினாறு அல்லது பதினேழு வயதுள்ள ஒரு வாலிபனான[3] இஸ்மவேல், இன்னும் ஒரு குழந்தையாகவே இருக்கும் "ஈசாக்குடன் விளையாடிக் கொண்டும்" அல்லது அவனைப் பார்த்து "நகைத்துக் கொண்டும்" (NEB) இருந்த வழியானது, கோலாகலமாக உள்ள இந்த நிகழ்ச்சிக்கு தடங்கலாயிற்று. NASB ஆனது, சாராளுடைய குழந்தையை இஸ்மவேல் கேலி (צָחַק, *tsachaq*, சகாக்) செய்ததை அவள் பார்த்ததாக, சிறிது கடுமையாக தெரிவிக்கிறது. *tsachaq சகாக்* என்ற பதமானது, சூழலைப் பொறுத்து நிறைய அர்த்தங்கள் கொடுப்பதாய் இருக்கிறது. எப்படி இருந்தாலும், "கேலி" என்ற பதம் கூட போதுமான கடுமையானதாய் இங்கே இல்லாவிட்டாலும், இஸ்மவேல் ஈசாக்கைத் "துன்பப்படுத்தினான்" என்று அந்தப் பத்தியில் பொருள் படும்படியாக

பவுல் கூறியதிலிருந்து புரிய வருகிறது (கலா. 4:29).[4] குறுநடை போடும் குழந்தைக்கு ஆகாரின் குமாரன் என்ன செய்தான் என்பது நமக்கு சரியானபடி தெரியாவிட்டாலும், இஸ்மவேல், சாராளுடைய குமாரனுக்கு அச்சுறுத்தலாக இருப்பதை அவள் பார்த்தாள். ஆபிரகாமின் மெய்யான வாரிசு என்ற அந்தஸ்து உனக்கு ஒரு போதும் கிடைக்கப் போவதில்லை என்று உரிமை பற்றி வாதாடிக் கொண்டும் மிக்க மன வேதனை ஏற்படுத்தும்படியாக, அவன் அந்த இளம் குழந்தையை சாதாரணமாக கேலி செய்ததாக சிலர் வலியுறுத்தியுள்ளார்கள். மற்றொரு வகையில், ஈசாக்குடன் அவன் முரட்டுத்தனமாக விளையாடிக் கொண்டிருக்கும் ("இடுக்கண் உண்டாக்கும் குணம்"[5]) மத்தியில், அவனுடைய வார்த்தைகளானது, அதிக அச்சத்தைத் தருவதாக நிச்சயமாக இருந்திருக்க வேண்டும்.

**வசனம் 10.** சாராள் அவளுடைய குமாரனுக்கு காயம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதால் பயந்தோ அல்லது அவளது பார்வையில், இஸ்மவேலுடைய செயல்கள் எதிர் காலத்தில் ஒரு எச்சரிக்கை செய்யும் வன்முறையாக மாறி, அவனுடைய வாழ்க்கையானது ஆபத்துக்குள் ஆகலாம் என்பது என்னவாயினும் அவளது சாட்சியாய் உள்ளது. ஆகவே **இந்த அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்; இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என்று** அவள் அவளுடைய புருஷனுடன் ஒப்புக் கொள்ளச் செய்தாள்.

ஆகாரையும், இஸ்மவேலையும் "புறம்பே தள்ளும்" என்று சாராள் ஆபிரகாமிடம் மன்றாடிய பொழுது, அவள் גָּרַשׁ (*garash*) கரேஸ் என்ற பதத்தை பயன்படுத்தினாள். 3:24இல் கர்த்தர் "மனுஷனைத் துரத்தி விட்டு, ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக் கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்" என்பதில் இதே மாதிரியான வார்த்தை உள்ளது. "இன்று என்னை இந்த தேசத்திலிருந்து துரத்தி விடுகிறீர்; நான் உமது சமுகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்; என்னைக் கண்டு பிடிக்கிற எவனும் என்னைக் கொன்று போடுவானே என்று" 4:14இல் காயீனைக் குறிப்பிட்டுச் சொல்லப்படுவதில், மறுபடியும் அது காட்டப் பட்டுள்ளது. இந்த செயலானது, மோசேயினுடைய சட்டத்தில் சேர்க்கப்படும் வரை (லேவி. 21:7, 14; 22:13; எண். 30:9; எசே. 44:22 பார்க்க)[6] திருமணத்தைத் கலைப்பதற்கு ஒரு தொழில்நுட்ப பதம் போன்று காணப்படாமல் இருந்த போதிலும், ஆதியாகமம் 21:10இல், அது விவகாரத்தை உட் குறிக்கிறது.

**வசனம் 11.** ஆபிரகாம் ஒரு குடும்பத்திற்கு மேலாக மற்றொரு குடும்பத்திற்கு சாதகமாக முடிவு எடுக்க வேண்டியிருந்ததால், அவன் இருதலைக் கொள்ளி எறும்பு போல இருப்பதை உணர்ந்ததும், அதுவே அவனுடைய பொதுவான அனுபவமாகும். ஆபிரகா முடைய குமாரன்

இஸ்மவேலைப் பற்றிய காரியத்தில், அவன் அதிகப்படியான மன உளைச்சலில் இருந்தான் ஏனென்றால் அவனுடைய மனதிற்குள் நடந்த போராட்டம் தான் என்று விரிவுரையாளர் சித்தரித்துள்ளார். வயது முதிர்ந்த முதியவர் முதன் முதலில் பிறந்த அவனுடைய குமாரன் மீது மேலான அன்பு வைத்திருந்தாலும், மற்றும் சாராளுடைய வேண்டு கோளினால் மிக்க வேதனை அடைந்து அவனுடைய ஆத்துமாவில் எரிச்சல் அடைந்தவனாய் அவன் இருந்தான். தேவன் ஏற்கெனவே ஈசாக்கை வாக்குத்தத்தத்தின் குழந்தையாக குறிப்பிட்டிருந்தும், மேலும் உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தைப் பெறக்கூடிய பாக்கியம் அவனுக்கு இருந்த போதிலும் (17:17-20; 18:9-15), ஏன் இந்த இரண்டு மனைவிகளும் சமாதானத்துடன் வாழ முடியவில்லை என ஆபிரகாம் அநேகமாக ஆச்சரியப்பட்டிருப்பான். எப்படி இருந்தாலும், அவனுடைய இரு மனைவிகளுக்குமிடையில் இருந்த பகைமையானது ஒருபோதும் உண்மையிலே குணப்படாததாயும் அது காணப்பட்டாலும், இப்போது இஸ்மவேலினுடைய வார்த்தைகளும் மற்றும் செய்கைகளும், ஈசாக்கைப் பற்றி ஒரு அபாயகரமான பொறாமையினால் உள்ளவைகள் என்பதை சாராள் உணர்ந்ததால், கோத்திரத் தலைவனுடைய வீட்டில் உள்ள இந்த நிலையானது குணமாக்க முடியாததாய் இருந்தது.

**வசனம் 12. அந்த பிள்ளையையும், உன் அடிமைப் பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம்** என்று **தேவன் ஆபிரகாமிற்கு** நற்போதனை செய்தார். எபிரேய பதம் (נַעַר, *na'ar),* "நார்" என்பது "இளைஞன்" என்று மொழிபெயர்க்கப்பட்டு, ஒரு சிசுவிலிருந்து ஒரு வயது வந்த மனிதனாகும் பருவத்திலுள்ள எந்த ஒரு ஆண் பிள்ளைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். உதாராணமாக, நார் என்பது அன்னாள் சாமுவேலுக்குப் பால் மறக்கச்செய்த போதும், (1 சாமு. 1:24), யோசேப்புக்கு பதினேழு வயதிலும் (37:2) அவனுக்கு பயன்படுத்தியதாயும் மற்றும் மறுபடியும் யோசேப்பு முப்பது வயதுடையவனாய் இருக்கும் போதும் (41:12, 46) இந்த பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் இஸ்மவேலை ஒரு "சிறு பையன்" என்று அழைப்பது, ஈசாக்கைப் போன்ற ஒரு சிறிய குழந்தை என்று அர்த்தம் கொடுப்பதில்லை.

தனிப்பட்ட உணர்வுகளை விட, வீட்டார் மிகவும் முக்கியம் வாய்ந்த சிலவற்றை கையாள்வதாயிருந்தார்கள். கோத்திரத் தலைவனுடைய சந்ததியாரையும் மற்றும் இறுதியாக பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் தேவன் ஆசீர்வதிப்பதற்கு ஈசாக்கு ஊர்தியாக இருந்தான். ஆகவே **ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்; ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள்** (12:2, 3; 17:19 பார்க்க) என்று சாராளைக் குறித்து தேவன் ஆபிரகாமிற்கு இதைக் கற்பித்துக் கொடுத்தார். இல்லாவிடில், ஈசாக்கு உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் ஒரு பிரத்தியேக ஒரு ஸ்தானத்தை நிரப்பி இருக்க

வேண்டும், மற்றும் ஆபிரகாமிலிருந்து, வாக்குத்தத்தத்தின் குழந்தையான ஈசாக்கின் மூலமாக தேவனுடைய பிள்ளைகளின் எதிர் கால சந்ததியார்களுக்கு, அவர்களுடைய மனித பரம்பரை பற்றிய ஆய்வு, ஒப்பிப்பதாய் இருந்திருக்க வேண்டும்.

பல காரணங்களுக்காக, தேவன் ஆகாரையும் இஸ்மவேலையும் அனுப்பி விடும்படி ஆபிரகாமிடம் எச்சரித்துள்ளார். (1) கோத்திரத் தலைவன் அவர்கள் இருவரையும் நேசித்ததாலும், மற்றும் அவனுடைய அடிமை மனைவியையும் மற்றும் அவனுடைய முதற் பேரான குமாரனையும் அனுப்புவதைப் பற்றி நினைக்கும் போது, அவனுடைய இருதயம் நொறுங்குண்டது. (2) ஆபிரகாம் அநேகமாக முந்தின காலத்தில், சாராளுக்கு அவன் கீழ்ப்படிந்து ஆகார் மூலம் ஒரு குமாரனைப் பெற ஒத்துக் கொண்டதை மீண்டும் நினைத்துள்ளான். அவளது திட்டமும் மற்றும் இதில் அவனுடைய பங்கேற்பும் அவர்களுடைய பாகத்தில் விசுவாசத்தின் ஒரு குறைவானது விளக்கப்படுவதுடனும், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும் அவர்களுடைய குடும்பத்தில் இது உருவாக்கியது (16:1-6). (3) பழங்கால கிழக்குக்கு அருகில் உள்ள கலாச்சார மரபுகளில் ஆபிரகாம் வாழ்ந்தாலும், அவனுக்கு மட்டுமல்ல, அவனது மனைவிக்கும் குடும்ப செயல் திட்டத்தைத் தீர்மானிக்க முடியவில்லை. இந்த காரணத்திற்காக, அவன் மீதுள்ள தேவ கட்டளையின்படி, அவனுடைய மனைவியினுடைய விருப்பங்களுக்கு ஒப்புக்கொடுக்கும்படி கூறியது ஏனென்றால் கோத்திரத் தலைவனுடைய திட்டங்களுக்கு மேலாக, தேவனுடைய தெய்வீக திட்டங்களுக்கு அதிகப்படியாக அவர்கள் ஒத்துப் போவதாயிருந்தாலும், அவன் ஒரு வழியில் கோபப்பட்டிருக்க வேண்டும்.

**வசனம் 13.** ஆதியாகமம் 17:20இல் “நான் அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்” என்று இஸ்மவேலைக் குறித்து, தேவன் ஆபிரகாமிற்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை மறுபடியும் ஏற்படுத்தி உறுதி செய்தார் என்பதே இதன் சாராம்சமாகும். கோத்திரத் தலைவனின் முதற் பேரான குமாரனையும் அவனுடைய தாயையும் அனுப்பிவிட்ட பிறகு, அவன் மடிந்து போவதில்லை என்று உறுதியளித்ததுடன், தேவன் **மேலும் அடிமைப் பெண்ணின் குமாரனை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றும், ஏனென்றால் அவன் உன்னுடைய சந்ததியாரில் ஒருவனாய் இருப்பதினால்** என்றும் உறுதியளித்தார். இந்த வழியில், தேவன் கோத்திரத் தலைவனின் இன்னலுக்குள்ளான இருதயத்தை அவரது ஆறுதலின் வார்த்தைகளினாலும் அமைதிப்படுத்தினார். மேலும், வசனம் 13ல் இஸ்மவேலுக்கு பண்ணின வாக்குத்தத்தத்துடன், வசனம் 12ல் இதற்கு முன்பு ஈசாக்குக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின் உறுதிப்பாட்டுடன் இணைத்தார்.

**வசனம் 14.** ஆபிரகாம் அவனுடைய அடிமை மனைவியையும் மற்றும் அவனுடைய முதற் பேரான குமாரனையும் அனுப்பிவிடும் இதயத்தைப் பிளக்கின்ற கஷ்டமான வேலையை சந்தித்துக் கொண்டிருந்த போது, இரவு நேரங்களில் அவன் நன்றாக உறங்கவில்லை என்பது சான்றாக உள்ளது. அவர்களை மறுபடியும் பார்ப்பேன் என்ற நம்பிக்கை, அவனுக்கு சிறிதளவும் இல்லை. நிம்மதியற்ற ஒரு இரவின் தனிமையிலிருந்து, கோத்திரத் தலைவன், மதிய வேளையில் வெப்பமானது பெருஞ்சுமையாக இருக்கும் என்பதால், ஆகாரும், இஸ்மவேலும் அதற்கு முன்னதாக எவ்வளவு தூரம் பயணப்பட முடியுமோ அவ்வளவு தூரம் பயணப்பட ஏதுவாக, அவர்களை குளிர்ந்த அதிகாலை வேளையிலே பயணத்தை ஆரம்பிக்க அநேகமாக விரும்பியிருக்க வேண்டும். ஆகவே, ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து, **ஆகாருடைய தோளின் மேல் வைத்து பிள்ளையையும் ஒப்புக் கொடுத்து, அவளை அனுப்பி விட்டான்** என்று உரைநூல் தெரிவிக்கிறது.

வனாந்தரங்களின் வழியாய் செல்லும் அவர்களது பயணத்திற்கு, கோத்திரத் தலைவன் அப்பத்திற்கும் ஒரு துருத்தி தண்ணீருக்கும்[7] அதிகமாக அவனுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு ஏன் கொடுக்க வில்லை என்று வாசிப்பவர்கள் ஆச்சரியப்படக்கூடும். செல்லும் வழியில் அத்துடன் பலசரக்குகளை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என அவன் எதிர்பார்த்தானா? அவர்கள் நீண்ட தூரம் பயணப்பட தேவையிருக்காது என்றும் சாராளின் கோபம் கூடிய சீக்கிரம் தணிந்து விடும் என்பதால் அவர்கள் திரும்பி வீட்டிற்கு வந்து விடுவார்கள் என்று நம்பிக் கொண்டு, ஆபிரகாம் ஒரு மறைமுகமான நோக்கத்தோடு இருந்தானா?

அதைப் போல, முன்பு ஆகார் வனாந்தரத்திற்கு ஓடிப்போன பொழுது, "கர்த்தருடைய தூதனானவர் நீரூற்றண்டையில் கண்டு," அவளை வீட்டிற்கு திருப்பி அனுப்பினார் என்பதை துயரப்படுகிற புருஷனும் மற்றும் தகப்பனுமானவன் நினைத்துக் கொண்டிருந்தான் (16:7-14). இந்த சமயத்தில், அவளுக்கும், இஸ்மவேலுக்கும் அதைப் போன்ற ஒரு அனுபவம் கிடைத்ததா? கோத்திரத் தலைவனுடைய மனதில் என்ன எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன என்பது நமக்குத் தெரியாவிட்டாலும், ஆனால் அவர்கள் எங்கிருந்தாலும், இரண்டு பேருக்கும் தேவையான தண்ணீரானது மிகுந்த வெப்பமான வனாந்தரத்தில் அதுவும் ஒரு நாள் பயணத்திற்குக் கூட போதாத அளவே அவன் கொடுத்துள்ளான்.[8] தேவன் எப்படியாயினும் தலையிட்டு, அவர்கள் தரிசு நிலத்தில் மடிந்து போகாமல் அவர்களை காத்துக் கொள்வார் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்திருக்க வேண்டும்.

ஆபிரகாம் அவைகளை ஆகாருடைய **தோளின் மேல் வைத்துப் பிள்ளையையும் ஒப்புக் கொடுத்து அவளை அனுப்பி விட்டான்** என்ற வாக்குமூலத்தில் மற்றொரு சிக்கல் எழும்பியுள்ளது. சரியானபடி, ஆகார் அவளின் தோளின் மேல் எதைச் சுமந்து கொண்டு சென்றாள்? (LXX) LXX மற்றும் சிரியன் பெஸ்ஷிட்டா மொழிபெயர்ப்பானது, அப்பம் மற்றும் தண்ணீருடன் கூட, குழந்தை (இஸ்மவேல்) யையும் அவளின் தோளின் மேல் ஆபிரகாம் வைத்ததாக சுட்டிக்காட்டுகின்றன. அதிகப்படியான நவீன வர்ணனைகளும் மற்றும் மொழிபெயர்ப்புகளும் இதைப் போன்ற ஒரு மொழிபெயர்ப்பை விரும்பிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன (RSV; NRSV; NEB; REB; NAB; JB; NJB; TEV; NJPSV; NCV; CEV; ESV). அத்துடன், சில விவிலிய விமர்சகர்கள், ஆதியாகமத்தின் ஆசிரியர் இந்தச் சம்பவத்தை அவர் உருவாக்கும் போது முற்றிலும் மாறான ஆதாரங்களைப் பயன்படுத்தியுள்ளார் என்றும், இந்த யோசனைக்குச் சாதகமாக, இந்த வரியை நியாயப்படுத்தி பின் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு இளைஞனை ஆகார் தனது தோளின் மேல் தூக்கிச் செல்ல முடியாது என்ற விவாதம் உண்டாகியுள்ளதால், இஸ்மவேல் அநேகமாக ஒரு சிசுவாகவோ அல்லது ஒரு குறு நடை போடும் குழந்தையாக அச்சமயம் இருந்திருக்க வேண்டும் என்றால், 21:9ஆம் வசனத்தில் உள்ள கலந்துரையாடலிலும், மற்றும் 16:1-4, 16 வசனங்களிலும் வரும் வரிசையான சம்பவப் பட்டியலிலும் உள்ளவைகள் வேறுபடும் பண்புடையதாயிருக்கிறது.

இருந்த போதிலும், எபிரெய வாக்கிய அமைப்பு ஒருவகையில் அலங்கோலமாக இருக்கிறது, அது மட்டும் அல்லாது அல்லது உரையைப் புரிந்து கொள்வதற்கு தலை சிறந்த வழியும் அல்ல என்பதற்கு NASB மற்றும் NIV மொழிபெயர்ப்புகள் சான்றாக உள்ளன. எபிரெய மொழியின் எழுத்தியல்பான ஒரு மொழிபெயர்ப்பானது கீழ்கண்டவாறு வருகிறது: "மேலும் ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் [அவைகளை] எடுத்து, ஆகாருடைய தோளின் மேல் [அவைகளை] வைத்துப் பிள்ளையையும் [அவளிடம்] ஒப்புக் கொடுத்து அவளை அனுப்பி விட்டான்."[9]

ஆதியாகமம் 21:10ல் உள்ள "புறம்பே தள்ளு" (*garash,* கராஷ்) என்ற பதத்தைப் போல, "தூரமாய் அனுப்பு" שָׁלַח (*shalach*, ஷலாச்) என்ற சொல் திறமும் கூட "விவாகரத்து" (உபா. 22:19, 29; ஏசாயா 50:1; எரே. 3:1; மல்க. 2:16) என்ற அர்த்தம் தருகிறது. எப்படியாயினும், பின்னால் வந்த பதமானது, முந்தின ஒன்றைப் போல கண்டிப்பு வாய்ந்ததாக காணப்படவில்லை. சாராள் ஆபிரகாமிடம் அடிமைப் பெண்ணை "புறம்பே தள்ள" விருப்பம் உடையவளாய் இருந்ததால், அவன் "அவளை தூரமாய் அனுப்பி" விட்டான். அவன் செயல்கள் சாதாரணமாக தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்ததாய் அமைந்ததே ஒழிய, அவைகள் தீங்கு இழைப்பவைகளாய் இருக்கவில்லை.

அடுத்த வாக்குமூலமானது, ஆகாரை நிலையான இருப்பிடமற்ற ஒரு நம்பிக்கையில்லாதவளாக படம் பிடித்துக் காட்டுகிறது. **அவள் புறப்பட்டுப் போய், பெயர்செபாவில் வனாந்திரத்திலே அலைந்து திரிந்தாள்.** ஆதியாகமம் 16ஆம் அதிகாரத்தில் அவளை விட்டு அவள் ஓடிப் போய் எகிப்திற்குச் செல்ல முயற்சித்ததைப் போல் அல்லாது, அதற்கு வேறு படும் பண்பாக இந்த சமயத்தில் போக வேண்டிய இலக்கு குறித்து அவள் மனதில் எந்த எண்ணமும் இல்லாது இருந்திருக்க வேண்டும். அவளும் மற்றும் அவளுடைய குமாரனும் தனித்து விடப்பட்டதாலும், குடியிருக்க வீடு இல்லாமலும், ஒருவரும் உதவி செய்ய முன்வராமலும் அல்லது அடைக்கலம் கொடுக்கவும் எவரும் இல்லை. அவர்கள் பெயர்செபாவிற்கு அருகில் உள்ள அதாவது பழைய கானானுக்கு தெற்குப் பகுதியில் உள்ள பாலைவனத்தில் அலைந்து கொண்டிருந்தார்கள். ஆபிரகாம் இன்னும் அபிமெலேக் ராஜாவாக உள்ள சீகார் என்ற இடத்தில் வாழ்ந்து வந்ததாக சான்று உள்ளது (20:1; 21:22-34 பார்க்க). மிக முக்கியமாக, தீயவர்கள் கிழக்கு நோக்கி பயணித்தார்கள் என்பதும், அது வட அரேபியாவாக இருக்க வேண்டும் என்றும், அந்த நிலப் பரப்பில் தான் இஸ்மவேலின் பிற்கால சந்ததியார் குடியேறினார்கள் என்பதும் தெரியவருகிறது (25:12-18). அவர்கள் பெயர்செபாவின் வனாந்தரங்களில் அலைந்து திரிந்தார்கள் என்பது உண்மையாயும் அந்த இடம் இரும்பைப் போன்ற கடினமானதாயும் இருந்தது என்றும், பெயரின் முதல் பாகமானது, “கிணறு” (בְּאֵר, *b*$^{e}$*’er,* பெர்) என்று சுட்டிக் காட்டப்படுகிறது. இருந்த போதிலும், அங்கே கிணறு இருந்தது என்றும், தேவ தூதன் அதை அவளுக்கு காண்பிக்கும் வரை, ஆகார் அதைப் பார்க்கவில்லை என்பதும் தெரிய வருகிறது.

## ஆகாருக்கு தெய்வீக வாக்குத்தத்தம் (21:15-21)

**15துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்த பின்பு, அவள் பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டு, 16பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்தமிட்டு அழுதாள். 17தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்; தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார். 18நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக் கொண்டுபோ, அவனைப் பெரிய ஜாதியாக்குவேன் என்றார். 19தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார்; அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். 20தேவன் பிள்ளையுடனே இருந்தார்; அவன் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து வில்வித்தையிலே வல்லவனானான். 21அவன் பாரான்**

**வனாந்தரத்திலே குடியிருக்கையில், அவனுடைய தாய் எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம் பண்ணுவித்தாள்.**

**வசனம் 15.** ஆகாரும் இஸ்மவேலும் ஒரு முழு நாள் பிரயாணத்திற்குத் தேவையான தண்ணீரை எடுத்துக் கொண்டு செல்லாததால், வனாந்தரத்தில் மத்தியான உஷ்ண வேளையின் கடுமையான தாக்கம் அவர்கள் மீது ஏற்பட்டது. **துருத்தியில் இருந்து தண்ணீர் செலவழிந்த பின்** அவர்களது தாகத்தைத் தணிக்க அவர்களால் முடியாது போனதால், **ஆகார் அவனை ஒரு செடியின் கீழே விட்டு விட்டாள்.** கடுமையாக அலங்கோலப்படுத்துகிற நிலையில் உள்ள ஒரு தாய் அவளது குமாரனை பாலைவனத்தில் உள்ள புதர்கள் ஒன்றின் நிழலில் விட்டு விட்ட அந்த ஒரு காட்சியை விளக்கமாக உரை நூல் வழங்குகிறது. ஆகார் அவளது குமாரனின் எதிர்பார்க்கப்பட்ட தவிர்க்க முடியாத மரணம் ஏற்படும் என்று அவள் நம்பிக்கையை இழந்து விட்டதை சம்பந்தப்படுத்துகிறது. அவனை நிழலில் விட்டு விடுவதன் மூலம், அவள் அவனுக்கு சூரியனுடைய நேரடியான ஒளிக்கதிர்களிலிருந்து லேசான நிவாரணம் கிடைக்கும் என்றும், மற்றும் அவனது கடைசி தருணங்களை எவ்வளவுக்கு எவ்வளவு வசதியாக்க முடியுமோ அவ்வாறு செய்தாள்.

**வசனம் 16.** இஸ்மவேல் கஷ்டப்படுவதை ஆகார் பார்த்து தாங்கிக் கொள்ள முடியாததால் **அவள் அவனுக்கு எதிராக அம்பு பாயும் தூரத்திலே போய் உட்கார்ந்தாள்** என்பது ஒரு மனிதன் எவ்வளவு தூரத்திலிருந்து வில்லை வைத்து அம்பை எய்ய முடியுமோ அதைக் குறிப்பதாகும். இருந்த போதிலும், அவளால் அவனைப் பார்க்க முடியாவிட்டாலும், உதவிக்காக அவனது அழுகையின் சத்தம் கேட்கும் தொலைவில் அமர்ந்திருக்க வேண்டும். இதுவும் கூட வீணானதாய் தான் இருந்திருக்க வேண்டும், ஏனென்றால் ஒரு தனி மனிதன் வறண்டு போன தொண்டையுடன் உஷ்ணத்தினால் நெடுஞ்சான்கிடையாக விழுந்து கிடந்தும் மற்றும் நீர்ப்போக்கினாலும் மரித்துக் கொண்டிருக்கிற ஒருவனால் வாய் விட்டு அதிகமாக அழக்கூட முடியாத நிலை உண்டாயிருக்க வேண்டும். ஆகார் உட்கார்ந்து கொண்டு, உதவியற்றவளாய் அவனது குமாரன் மரணத்தை நோக்கி அடி வைப்பதைத் தடுக்க முடியாமல், விரக்தியில் அவள் உச்சரித்த ஒரு விண்ணப்பம்: **பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன்** என்பது ஆகும். இஸ்மவேல் அல்லது அவளும் பிழைப்பதற்கு அவளுக்கு இருந்த ஒரே ஒரு நம்பிக்கை என்னவென்றால் தெய்வீக இடைப் படுதலுக்காக விழுந்து கிடப்பதுதான் என்பதால் **அவள் சத்தமிட்டு அழுதாள்.**

**வசனம் 17.** இந்த வருந்தத்தக்க தருணத்தில், **தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்.** பிறகு, **தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு: ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது?** என்று கேட்டாள். தேவதூதன் அவள் பதில் சொல்வதற்கு ஒரு தருணம் கூட கொடுக்காத

பட்சத்தில், இந்த கேள்வியானது, நிச்சயமாக பேச்சுத் திறன் கொண்ட நோக்கம் உடையதாய் உள்ளது. பதிலாக, அவளுக்கு ஆறுதல் தரும் வார்த்தைகளால், அவனுடைய கேள்வியைத் தொடர்ந்து விரைவாக: **பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார்** என்றான் (16:11; 17:20 விமர் சனங்களைப் பார்க்க). ஆபிரகாம் எவ்வாறு அவனுக்குப் பிரியமான இருவரையும் இம்மாதிரியான சிதறியுள்ள விதிகள் கொண்ட வனாந்தரத்திற்குள் அனுப்பினான் (21:14) என்ற கேள்விக்கு உறுதியளிக்கும் பதிலாக இந்த கூற்று உள்ளது. இந்நேரத்திற்குள் கோத்திரத் தலைவனுடைய வாழ்க்கையில், அவனுடைய விசுவாசமானது, தேவன் அவர்களைக் கவனித்துக் கொள்வார் என்றும், மற்றும் அவர்களுடைய கஷ்டமான பிரயாணங்களில் அவர்களது தேவைகளைச் சந்திப்பார் என்ற அளவில், அவன் விருப்பத்துடன் அவரை நம்பிக்கொண்டிருந்துள்ளான் என்ற அளவு வரை அவனது விசுவாசமானது நிச்சயமாக வளர்ந்துள்ளது.

**வசனம் 18.** பிறகு, பயங்கரமான வனாந்தர யாத்திரைக்கு அப்பால், இஸ்மவேலுக்கு ஒரு எதிர்காலம் உள்ளது என்ற உண்மையை, தேவதூதன் ஆகாருக்கு அறிவொளி ஏற்றி வைத்தான். நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக் கொண்டு போ என்று அவன் அவளிடம் நற்போதனை செய்தான். **உன் கையை அவன் மேல் நிலையாக இருக்கச் செய்** என்று உரையானது எழுத்து சார்பாக கூறுகிறது. “உன்னுடைய ஊக்குவித்தலை அவனுக்குக் கொடு”[10] என்ற அர்த்தம் தரும்படியாக, இந்த ஒரு எபிரெய தனி மரபானது இருக்கிறது. பிறகு, பல வருடங்களுக்கு முன்னதாக, தேவதூதன் ஆகாரிடம் பரலோக சத்தத்தின் ஒரு வாக்குறுதியை உண்டு பண்ணியது வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த சமயம், மிகவும் பிரத்தியேகமாக தேவன் **அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்** என்று அவளுடைய குமாரன் இஸ்மவேலைக் குறித்த வாக்குத்தத்தத்தை சொல்லிக் கொண்டிருந்துள்ளார் (16:10-12 பார்க்க).

**வசனம் 19.** தேவன் இஸ்மவேலின் எதிர்காலத்திற்கான ஆசீர்வாதங்களில் மட்டுமே விருப்பமுள்ளவராய் இராமல், துருத்தியில் இருந்த தண்ணீர் முற்றிலும் காலியானதால், அவனது தற்போதைய நிலைமையான நீர்ப்போக்கு பிரச்சனையிலும் கூட அவர் கரிசனையுள்ளவராய் இருந்தார். அவளுடைய விண்ணப்பத்திற்குப் பதிலாக, **தேவன் அவளுடைய** [ஆகாருடைய] **கண்களைத் திறந்தார்; அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டாள்.** “பெயர்செபாவின் வனாந்தரங்களிலே” அவர்கள் இருந்த போதே, என்றென்றுமே, அந்தத் துரவானது அங்கேயே தான் இருந்துள்ளது (21:14 வர்ணனைகளைப் பார்க்க). அவளுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை அறவே அற்றுப் போனதாலும், மற்றும் அவளுடைய கண்கள் எல்லாம் கண்ணீர்க் குளமாய் இருந்ததாலும், அவளால் அதைப்

பார்க்க முடியவில்லை என்பதில் சந்தேகம் இல்லை. ஆகாருக்கு தேவதூதனிடமிருந்து மேலும் எந்த ஒரு போதனையும், இந்தக் காரியத்தில் தேவைப்படாததால், **அவள் போய் துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்கு குடிக்கக் கொடுத்தாள்**. இந்த விரிவுரையானது, ஆகார் அவளது சுய தாகத்தைத் தீர்த்துக் கொண்டாள் என்று சொல்லாமல், ஒரு தாய் ஸ்தானத்திலிருந்து முதன்மையான கரிசனையாக அவளுடைய குழந்தைக்கு தண்ணீர் ஏற்பாடு செய்தாள் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. வெளிப்படையாக, இஸ்மவேல் புத்துணர்ச்சி பெற்ற பின் தான், ஆகார் உயிரைக் காக்கும் தண்ணீரைப் பருகினாள் என தெரிய வருகிறது.

**வசனம் 20.** பெயர்செபாவுக்கு அருகாமையில் உள்ள பாலைவனத்தில், ஆகார் மற்றும் இஸ்மவேலுடைய அனு பவங்களைத் தத்ரூபமான ஒரு கணக்கை காண்பித்த பிறகு, ஆசிரியர் இஸ்மவேலுடைய எஞ்சிய வாழ்க்கையைப் பற்றி சுருக்கமாக திரட்டி காட்டியுள்ளார். **தேவன் பிள்ளையுடனே இருந்தார்**, அவன் வளர்ந்து, "ஒரு காட்டுக் கழுதையைப் போன்ற ஒரு மனிதனாக" (16:12) சமுதாயத்தின் விளிம்புகளில் **வனாந்தரத்திலே குடியிருந்தான்.** நாடோடியான ஒரு வாழ்க்கை வகையை தெரிந்தெடுத்து வாழ்ந்த இஸ்மவேல் **வில் வித்தையிலே வல்லவனானான்**. ஏனென்றால் தாக்குதல் நிறைந்த ஒரு சூழ்நிலையில் அவன் காலம் தள்ள வேண்டிய நிர்ப்பந்தமே அவன் ஒரு வேட்டைக்காரன் ஆவதற்கு மகத்தான திறமையை வளர்த்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். பிற்காலங்களில் அவனுடைய சந்ததியாரில் சிலர் "கேதாரின் குமாரர்கள்" "வில் வீரர்களாயும்" மற்றும் "பராக்கிரமசாலிகளாயும்" இருந்தார்கள் என சித்தரிக்கப் பட்டுள்ளது (ஏசாயா 21:17; ஆதி. 25:12, 13ஐப் பார்க்க).

**வசனம் 21.** கடைசியாக, சுருக்கமான ஒரு அறிக்கையானது, **பாரான் வனாந்தரங்களில்** வாழ்ந்து வந்தான் என்றும், அந்த பெரிய பாலைவனமானது, கானானின் தெற்கு பாகத்தில் இருந்து நீண்டு கொண்டு, கூடிய மட்டும் மத்திய கிழக்கு சீனாய் தீபகற்பம் வழியாகவும் மற்றும் கீழே செங்கடல் (அக்கபா வளைகுடா) வரையிலும் உள்ளது (எண். 12:16; 13:3, 26). ஆகார் ஒரு எகிப்திய ஸ்திரீயாக இருந்ததாலும் (16:1, 3; 21:9; 25:12) மற்றும் அவளும், இஸ்மவேலும் அவளுடைய சொந்த பூமிக்கு மிகவும் அருகாமையில் உள்ள பகுதியில் வாழ்ந்து வந்ததாலும், அவள் **எகிப்து தேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவளுடைய** குமாரனுக்கு **விவாகம்** பண்ணுவித்தாள். கிழக்கிற்கு அருகாமையில் உள்ள பழங்கால வழக்கப்படி, சாதாரணமாக தகப்பனார் அவனுடைய மகனுக்கு ஒரு மனைவியை ஏற்பாடு செய்ய வேண்டும் (24:1-67; 34:4). ஆபிரகாம் ஆகாரை அப்பால் அனுப்பிவிட்டதால், இந்த சம்பவத்தில் அது நடைபெறாத ஒன்றாகும். ஆகவே, அவள் அவளது கணவன் மேல் உள்ள பொதுவான கடமையை ஏற்றுக்

கொண்டவளாயும் மேலும் அவள் அநேகமாக பாரான் வனாந்தரங்களின் வழியாக (37:28 பார்க்க) கூண்டு வண்டியில் பயணம் செய்து கொண்டிருக்கும் பெரும் வணிகர்களிடம் இருந்து ஒரு எகிப்திய அடிமையை ஒழுங்கு செய்திருக்க வேண்டும்.

## அபிமெலேக்குடனான ஆபிரகாமின் உடன்படிக்கை (21:22-34)

இந்த புதிய கதையில், ஆபிரகாம் அபிமெலேக்குடன் பேரம் பேசிக் கொண்டிருப்பதைக் காண முடிவதால், திரும்பவும் கவனம் ஆபிரகாமின் பக்கம் மாறி உள்ளது.

### உடன்படிக்கை (21:22-26)

**22அக்காலத்தில் அபிமெலேக்கும் அவன் சேனாதிபதியாகிய பிகோலும் ஆபிரகாமை நோக்கி: நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார். 23ஆகையால், நீ எனக்காவது, என் குமாரனுக்காவது, என் பேரனுக்காவது வஞ்சனை செய்யாமல், நான் உனக்குச் செய்த தயவின்படியே, நீ எனக்கும், நீ தங்கியிருக்கிற இந்தத் தேசத்திற்கும், தயவு செய்வேன் என்று இங்கே தேவன் பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான்.**
**24அதற்கு ஆபிரகாம்: நான் ஆணையிட்டுக் கொடுக்கிறேன் என்றான். 25ஆனாலும், அபிமெலேக்குடைய வேலைக்காரர் கைவசப்படுத்திக்கொண்ட துரவின் நிமித்தம் ஆபிரகாம் அபிமெலேக்கைக் கடிந்துகொண்டான். 26அதற்கு அபிமெலேக்கு: இந்தக் காரியத்தைச் செய்தவன் இன்னான் என்று எனக்குத் தெரியாது, நீயும் எனக்கு அறிவிக்கவில்லை; இன்று நான் அதைக் கேட்டதேயன்றி, இதற்குமுன் அதை நான் கேள்விப்பட்டதே இல்லை என்றான்.**

**வசனம் 22. அந்த சமயத்தில்**, இந்தக் காரியம் நடந்தேறியது என்று உரைநூல் தெரிவிக்கிறது. “எந்த சமயத்தில்?” என்ற கேள்வியானது இயற்கையாகவே எழும்புகிறது: ஈசாக்கு பிறப்பதற்கு முன்னால் (21:1-3) என்றும், அதாவது சாராளைப் பற்றி ஆபிரகாம் அபிமெலேக்கிடம் பொய்சொல்லிய சிறிது நேரத்திற்கு பிறகு என்றும் (20:1-18) ஆதியாகமத்தின் ஆசிரியர் இங்கே அந்தக் காலமானது பின் வாங்கியுள்ளதாக சில அறிஞர்கள் நினைக்கிறார்கள். அந்தப் பார்வையானது சரியாக இருப்பினும் “அந்த நேரத்தில்” என்பதன் சொல் திறமானது, அநேகமாக அது கால வரிசைப்படி சம்பவங்களை விளக்க கடைப்பிடித்தவாறு பொருள்படும்படியாக காணப்படுகிறது. இல்லாவிடில், ஈசாக்கின் பிறப்பிற்குப் பின் மற்றும் குழந்தையானது தாய்ப்பால் குடிப்பதை மறந்த பின்னும், மற்றும் ஆகாரையும்

இஸ்மவேலையும் இனமாற்றம் செய்த பின், ஆபிரகாமிற்கும் அபமெலேக்கிற்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டிருக்கும் (21:1-21).

இந்த நிகழ்ச்சியின் போது, **அபிமெலேக்கு** அவனது படையின் **சேனாபதி பிகோலையும்** கூட்டிக் கொண்டு வந்தான். "பிகோல்" என்பதற்கு ஐயத்திற்கிடமான தோற்றம் என்று பொருள்படுகிறது. சிலர் இதை உறீரியன்[11], அனடோலியன்[12], அல்லது பெலிஸ்தியன் என்று அடையாளம் காட்டியிருந்தாலும் (21:32, 34; 26:1, 26), இந்தப் பெயரானது பழங்கால உரைநூல் அல்லது கல்வெட்டுகளில் கண்டுபிடிக்கப்படவில்லை. உறீரியர்கள் வடமேற்கு மெசெப்பொத் தோமியாவிலிருந்து (ஈராக்) அனட்டோலியா (துருக்கி) வரையிலும் விரிவடைந்தார்கள் என்பது தெரிந்த போதிலும், ஹார்டன் ஜெ. வென்ஹம், பிகோலுடைய மூதாதையர்கள் "ஏஜியன் தீவுகள் அல்லது கிரேட் வழியாக அனட்டோலியா" ("கப்தோர்"; ஆமோஸ் 9:7) லிருந்து அதாவது அதிகப்படியான பெலிஸ்தர்களின்[14] உண்மையான இருப்பிடத்திலிருந்து வந்தவர்கள் என்றும் ஊகித்துள்ளார்.

**நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார்** என்று சொல்லி அபிமெலேக்கும், பிகோலும் ஆபிரகாமை பாராட்டியுள்ளார்கள். குறிப்பாக திரளான மந்தை களுடனும், கால் நடைகளுடனும், ஆபிரகாம் விருத்தியடைந்து, செல்வத்துடனும், வளமையுடனும் பல வருடங்களாக இருப்பதை அவர்கள் கவனித்துள்ளார்கள். திரளான எண்ணிக்கையுள்ள ஒரு மிருக ஜீவ கூட்டத்திற்கு அவைகளைப் பாதுகாப்பதற்குப் பயிற்சி பெற்ற அவைகளை மேய்ப்பவர்களும் மற்றும் ஆட்டிடையர்களும் தேவைப்பட்டுள்ளது. இதற்கு முன்பு, கால் நூற்றாண்டிற்கு மேல் ஆபிரகாமின் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களாகிய முந்நூற்று பதினெட்டு ஆட்கள் ஆயுதம் தரிப்பித்திருந்தவர்கள் இருந்தார்கள் என்றும் (14:14) மற்றும் இந்நேரத்தில், அது இருமடங்காகக் கூட இருந்திருக்க வேண்டும். ஆபிரகாமுடைய பெரிய பரிவாரத்தை அபிமெலேக்கும் அவனுடைய சேனாபதியும், ஒரு சாத்தியமான பயமுறுத்தலாக நன்றாகவே பார்த்திருக்கக்கூடும்.

ஆகவே பெலிஸ்தர்கள் ஒரு கூடுகையை ஆரம்பித்தார்கள். கோத்திரத் தலைவனுடன் "தேவன்" (אֱלֹהִים, *'Elohim,* ஏலோகிம்) இருப்பதாகவும், அவன் செய்யும் எல்லா காரியங்களிலேயும் அவனை ஆசீர்வதிப்பதாகவும், அதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள் என்ற ஒரு உயரிய புகழுரையுடன், அவர்கள் அவர்களது உரையாடலை துவக்கியுள்ளார்கள். ஏலோகிம் (*'Elohim*) என்ற இனம் சார்ந்த பதமானது தேவனுக்கும், மற்றும் ஆதியாகம புஸ்தகத்தில், ஒரே சீரான பதமாக அனைத்து அயல்நாட்டுக் காரர்களால் பயன்படுத்துவதாயும் மேலும் எந்த ஒரு தெய்வத்திற்கும் பொருந்துவதாயும் இருந்திருக்கலாம் (31:30;

41:38). அபிமெலேக் கினுடைய மனிதர்களுக்கும் ஆபிரகாமுடைய மனிதர்களுக்கும் இடையே உள்ள இறுக்கத்தை அல்லது பகைமையுள்ள செயலை தவிர்ப்பதற்காக அபிமெலேக்கு இந்த ஐஸ்வரியவனாயும் மற்றும் வல்லமையுள்ளவனாயும் உள்ள அயல் தேசத்தானிடம் ஒரு உடன்படிக்கையை அதாவது வலுச்சண்டைக்கு போகாத ஒரு உடன்படிக்கையை பண்ண விருப்பம் உள்ளவனாய் இருந்தான்.

அவர்களது முதற் சந்திப்பிற்குப் பின் (20:1-18), அவர்களுக் கிடையே உள்ள நிலைமையானது ஏறத்தாள எதிர்மறையாய் இருந்த காரணத்தினால் இரு மனிதர்களுக்கும் இடையில் கூடி ஆலோசனை பண்ணும் கூட்டமானது பல வருடங்களாக நடந்து கொண்டிருந்திருக்க வேண்டும். முதலில், அபிமெலேக்குக்கு முன்னால், ஆபிரகாம் அவனுடைய ஜீவனைக் குறித்து பயந்தான். அதனால் தான் சாராளைக் குறித்து பொய் சொல்லி, அவளை ராஜாவிற்கு ஒரு மனைவியாகக் கொடுப்பதற்கும் அவனை வழி நடத்தியது. இப்பொழுது, எப்படியாயிருந்தாலும், சூழ்நிலையானது பார்ப்பதற்கு வித்தியாசமாக காணப்பட்டது. தேவனுடைய ஆசீர்வாதங்கள் கோத்திரத்தலைவனின் செல்வத்தை உயர்த்தியதுடன் மற்றும் அவனுடைய போர் வீரர்களின் எண்ணிக்கையும் பெருகியதுடன் (21:22) ராஜா அவனுடைய நாட்டில் உள்ள இந்த அந்நியனைப் பார்த்து மிரண்டு போனவனாயும் காணப்பட்டான்.

**வசனம் 23.** ஆகவே, அபிமெலேக்கும் அவனுடைய படையின் சேனாபதியும்; ஆபிரகாமுடன் ஒரு உடன்பாடு செய்து கொள்ள வகை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் ஆபிரகாமிடம், நீ எனக்காவது, என் குமாரனுக்காவது, என் பேரனுக்காவது **வஞ்சனை செய்யாமல்,** நான் உனக்குச் செய்த தயவின்படியே, நீ எனக்கும், நீ **தங்கியிருக்கிற இந்தத் தேசத்திற்கும், தயவு செய்வேன்** என்று இங்கே **தேவன் பேரில் ஆணையிட்டுக்** கொடு என்று வேண்டிக் கொண்டான். இல்லாவிடில், ஆபிரகாம் ராஜாவின் மக்களைத் தாக்க மாட்டேன் என்றும் அல்லது அவனுடைய இராஜ்ஜியத்தை அகற்றிவிட்டு இடத்தைக் கைப்பற்றமாட்டேன் என்றும் அல்லது எதிர்கால ராஜவம்சத்தையும் தாக்கமாட்டேன் என்றும் ஒரு பவித்திரமான உறுதிமொழியை தேவனுக்கு முன்பாகச் செய்ய வேண்டும் என்று ராஜா ஆபிரகாமுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள விருப்பம் உள்ளவனாய் இருந்தான். ஆபிரகாம் இதே மாதிரியான **இரக்கத்தை** (חֶסֶד, *chesed*, செஸ்டு) “வாய்மை தவறாமை” அல்லது “இணைபிரியாத அன்பு” இந்த **பூமியில் பரதேசியாய் தங்கியிருந்தாக** வெளிப்படுத்தப்பட்ட போதிலும், அபிமெலேக்கு கோத்திரத் தலைவனை காண்பிக்குமாறு வேண்டினார்.

**வசனம் 24. அதை நான் உறுதி செய்கிறேன்** என்று **ஆபிரகாம்** உடனடியாக சொன்னான். இருந்த போதிலும், கோத்திரத் தலைவன் மட்டுமே, சபதத்தை உறுதி செய்ததாக நாம் வாசிக்கிறோம். ஆனால்

சட்டத்திற்கு கட்டப்பட்டுள்ள இந்த வலுச் சண்டைக்கு போகாமலிருக்கிற உடன்படிக்கையானது நடைமுறைப்படுத்த இருவருமே உறுதி செய்ய வேண்டும் என்பது நமக்குத் தெரியும். ஆகவே, இந்தச் சடங்கின் முடிவான கணக்கின்படி, அவர்கள் இருவரும் அதை உண்மையுடன் கடைப்பிடிக்க “உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள்” (21:31) என்று விரிவுரையாளர் வாக்குமூலத்தில் உள்ளடக்கியுள்ளார். அநேகமாக, இதற்கு முன்பு, இது சொல்லப்படவில்லை, ஏனென்றால் யாரொருவர் உடன்படிக்கையை நாடிச் செல்கின்றாரோ அவர் அதை மெய்பற்றுடன் உறுதி செய்துள்ளார் என அது அனுமானிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாம் இந்த மாதிரியான ஒரு வாக்களிப்பினை அபிமெலேக்கிடம் அளித்துள்ளாரா அல்லது இல்லையா என்பதே ஒரே ஒரு கேள்வியாக உள்ளது. அவன் அதைச் செய்வதற்கு சம்மதம் தெரிவித்த உடனே சடங்கின் பிற காரியங்கள் தொடர்ந்து செயல்பட முடியும்.

**வசனம் 25.** இரண்டு மனிதர்களும்; உடன்படிக்கையை உறுதி செய்வதற்கு முன்னதாக, **ஆபிரகாமிற்கு** குறிப்பிடப்பட வேண்டிய ஒரு மனத்தாங்கலை கொண்டு வந்துள்ளார். **அவனுடைய மனிதர்கள் வெட்டிய துரவுகளையெல்லாம்** (காண்க 26:15, 18) **அபிமெலேக்கினுடைய வேலைக்காரர் தூர்த்து மண்ணினால் நிரப்பிப் போட்டார்கள்** என்று அவன் **அபிமெலேக்கிடம் புகார் பண்ணினான்.** கோத்திரத்தலைவனுக்கு, இது ஒரு முக்கியமான சோதனை வழக்காக இருந்துள்ளது. ஏற்கனவே, ராஜாவிடமும் மற்றும் அவருடைய மக்களிடமும் “இரக்கத்தை” (*chesed*, செஸ்டு). காண்பிப்பதாக உறுதி செய்தபடியால் (21:23, 24), அவனால் உறுதி மொழியை மீறி இந்தக் குற்றங்களைப் புரிந்த அபி மெலேக்கினுடைய மனிதர்களைத் தண்டிக்க முடியவில்லை. ஆகவே, இந்த சம்பவத்தில் நீதிக்காக ஆபிரகாம் ராஜாவிடம் விண்ணப்பம் செய்து, அவரது உதவியை நாடுவதே ஒரே வழியாக இருந்துள்ளது.

**வசனம் 26.** தூர்த்துப்போட்ட துரவைப் பற்றி கோத்திரத் தலைவனுடைய புகாரானது, நம்மில் சிலருக்கு இன்று அது ஒரு பிரதானமான குற்றமாக காணப்படாவிடினும், இது மக்களுக்கும் மற்றும் மிருக ஜீவன்களுக்கும் பாதி வறண்டுள்ள பூமியிலே அவர்களுக்கு வாழ்வா, சாவா என்பதற்கு சாத்தியமான ஒன்றாக இருந்துள்ளது. **அபிமெலேக்குக்கு** அருகில் ஆபிரகாம் இந்தப் பூமியில் சமாதானத்துடன் வாழ முடியும், அதுவும் கூட தண்ணீரைக் குறித்த விஷயத்தில் எந்த ஒரு உரிமையும் இல்லாமல் இருந்தால், அந்த ஒரு வாக்குத்தத்தத்தின் மதிப்பு தான் என்ன?

இந்தப் பிரச்சனை புதிய உடன்படிக்கைக்கு நல்ல ஒரு சோதனையாக இருந்தது. ராஜாவின் வேலைக்காரரில் சிலர் செய்த தவறுகளை சரி செய்து, ஆபிரகாமிடம் அவர் தொழில் ஒப்பந்தத்தை

மிகவும் நேர்த்தியாக கடைபிடிப்பாரா அல்லது மாட்டாரா என்பதை தெரிந்து கொள்ள அவன் விருப்பமுடையவனாய் இருந்தான். எல்லாவற்றிற்கும் பிறகு, அவனும் மற்றும் அவனுடன் உள்ள எல்லாரையும் இந்த இடத்திலே குடியிருங்கள் என்று சொல்லி, அபிமெலேக்கு அவனை வரவேற்றார் (20:15). அந்த பூமியையும், அதில் உள்ள தண்ணீரையும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்துவது, இயற்கையாகவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. **இந்த காரியத்தைச் செய்தது யார்** என்று ராஜா முழுவதும் அறியாமையிலே கூறினார். பிறகு, அவர் இக்காரியத்தின் சில குற்றங்களை ஆபிரகாம் மீது மாற்றியதுடன், அவன் பிரச்சனையை அறிவிப்பதில் அஜாக்கிரதையாக இருந்து கொண்டிருந்ததாக தெரிவித்தார். அபிமெலேக்கு அவனுக்கு அதைப்பற்றி எதுவும் **இன்று வரை கேள்விப்படவில்லை** என்று வலியுறுத்தினான்.

## உடன்படிக்கையின் உறுதி (21:27-34)

**27அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடுகளைக் கொண்டுவந்து அபிமெலேக்குக்குக் கொடுத்தான்; அவர்கள் இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். 28ஆபிரகாம் ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளைத் தனியே நிறுத்தினான். 29அப்பொழுது அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி: நீ தனியே நிறுத்தின இந்த ஏழு பெண்ணாட்டுக்குட்டிகள் என்னத்திற்கு என்று கேட்டான். 30அதற்கு அவன்: நான் இந்தத் துரவு தோண்டினதைக்குறித்து, நீர் சாட்சியாக இந்த ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளை என் கையில் வாங்கிக்கொள்ளவேண்டும் என்றான். 31அவர்கள் இருவரும் அவ்விடத்தில் ஆணையிட்டுக் கொண்டபடியால், அந்த இடம் பெயெர்செபா என்னப்பட்டது. 32அவர்கள் பெயெர்செபாவிலே உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் அபிமெலேக்கும், அவன் சேனாதிபதியாகிய பிகோலும் எழுந்து பெலிஸ்தருடைய தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள். 33ஆபிரகாம் பெயெர் செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுதுகொண்டான். 34ஆபிரகாம் பெலிஸ்தருடைய தேசத்தில் அநேகநாள் தங்கியிருந்தான்.**

**வசனம் 27.** அபிமெலேக்கு, அவருடைய வேலைக்காரர் **ஆபிரகாமுடைய** துரவுகளைத் தூர்த்து போட்ட விஷயம் அவருக்குத் தெரியும் என்பதற்கு மறுப்பு தெரிவித்ததை ஆபிரகாம் சான்றுடன் நம்பினான். இருந்த போதிலும், உரைநூல் இந்தச் சர்ச்சையின் விளைவை பதிவு பண்ணாவிட்டாலும், ராஜா அநேகமாக கோத்திரத்தலைவனுடைய உரிமைக் கோரிக்கையை கண்டு பிடிப்பதற்கு சம்மதித்தார். அபிமெலேக்கினுடைய வலுச் சண்டைக்குப்

போகாமல் இருக்கும் உடன்படிக்கைக்கு ராஜா தவற்றினை சரி செய்வார் என்று சிறிதும் நம்பிக்கையில்லாமல், ஆபிரகாம் அநேகமாக ஒப்புக்கொண்டிருக்கமாட்டான். இந்தச் சர்ச்சைக்கு ஒரு சமாதானமாக தீர்வு காண்பதற்கு பாராட்டும் விதமாக, கோத்திரத்தலைவன் ஆடுகளையும், எருதுகளையும் எடுத்து அவைகளை **அபிமெலேக்குக்குக் கொடுத்தான்.**

**அவர்கள் இருவரும்** நல்ல ஐக்கியத்தைப் புதுப்பித்தலுடன் ஒருவருக்கொருவர் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளை உள்ளடக்கியுள்ள ஒரு **உடன்படிக்கையை பண்ணிக் கொண்டார்கள்.** “ஒரு உடன்படிக்கை செய்து” (כָּרַת בְּרִית, *karath*, *b$^e$rith,* கரத் பெரித்) என்று எபிரெய சொல் திறம் மொழி பெயர்ப்பதுடன், உண்மையில் “ஒரு உடன்படிக்கையை பிளந்து என்ற அர்த்தத்துடனும், பழங்கால நடைமுறையிலே உள்ள, ஒரு மிருகத்தை இரு துண்டாகப் பிளந்து, இறந்த விலங்கினுடைய பாகங்களை வெவ்வேறாகப் பரித்து, பல வித முறைகளின் ஊடாக கடந்து செல்லுவதை ஜாடையாகக் குறிப்பதாக இருக்கலாம் (15:7-11, 17, 18 காண்க). இவ்வாறு செய்வதால் அதில் பங்கு பெற்ற அனைவரும் உடன்படிக்கையின் கடமைகளை பின்பற்றாவிடில் அந்த விலங்கின் விதிக்கு ஆன சாபத்தின்**கீழ்** தங்களை வைக்கிறார்கள்.[15]

**வசனம் 28. ஆபிரகாம்,** மந்தையிலிருந்து **ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளை** அவர்களுக்காக ஏற்பாடு செய்தான் என்று விவிலியம் கூறுகிறது. அந்த இரு மனிதர்களும் சற்று முன்பு பலியிட்டபின், அத்துடன் கோத்திரத்தலைவன் ஏழு விலங்குகளைத் தெரிந்தெடுத்தார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. இந்த செயலானது, அபிமெலேக்கிற்காக, அவன் விளையாடியிருக்க வேண்டும் என்று அதனுடைய பொருள்படுவதாயும், மேலும் என்ன நடைமுறை வழக்கத்தில் உண்டோ, அதற்கும் அப்பால், இந்தச் செயல் நடைபெற்றிருக்க வேண்டும்.

**வசனம் 29.** கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ள ஆட்டுக் குட்டிகளின் முக்கியத்துவமானது, சுய விளக்கமுடையதாக இல்லாததால் ராஜா அவைகளை வாங்க மறுத்திருக்க வேண்டும். அவர் தெளிவு செய்து கொள்ளும் எண்ணத்தில், ஆபிரகாமிடம் **நீ தனியே நிறுத்தின இந்த எழு பெண்ணாட்டுக்குட்டிகள் என்னத்திற்கு**? என்று அழுத்தமாக கேட்டார்.

**வசனம் 30.** ஆபிரகாம் அவனுடைய நோக்கங்கள் மற்றும் செயல்கள் ஆகிய இரண்டையும் இவ்வாறாக ராஜாவிற்கு விளக்கியுள்ளார்: **நான் இந்தத் துரவு தோண்டினதைக் குறித்து, நீர் சாட்சியாக இந்த எழு பெண்ணாட்டுக்குட்டிகளை என் கையில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்றான்.** கோத்திரத் தலைவன், அவனுடைய மனிதர்கள் தோண்டிய துரவு அவனைச் சேர்ந்தது என்றும், அதற்கு பொதுவான ஒரு உறுதி மொழியாக, ராஜா அதனை உறுதி செய்ய வேண்டும் என்ற விருப்பம்

உள்ளவனாயும், அபிமெலேக்கு அந்த துரவிற்குச் சரியான சொந்த உடைமையாக்கிக் கொள்வதற்கு, தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே, வலுச் சண்டைக்குப் போகாமல் இருக்கும் ஒரு உடன்படிக்கை அல்லது உதட்டளவில் வாக்குத்தத்தம் செய்யும் பாதுகாப்பினை விட, அவனது பிரதான விருப்பமுடையதாய் இருந்தது.

**வசனம் 31.** அவர்கள் இருவரும் ஒரு உடன்படிக்கை பண்ணினபடியால், அந்த இடத்திதற்கு **பெயெர்செபா** என்ற பெயர் கோத்திரத் தலைவனால் வழங்கப்பட்டதாயும், இந்த ஒரு கூற்றை, இந்த உரையானது, ஆபிரகாமிற்கு அபிமெலேக்குடன் உள்ள இரண்டாவது மோதல் என முடிக்கிறது. இத்துடன், இந்த பிரிவிலே, "துரவு" (21:25, 30), மறுபடியும் குறிப்பிட்டுள்ள "உறுதி செய்து கொண்டு," "ஏழு," மற்றும் "உடன்படிக்கை" என்பவகைள் சொல்லப்பட்டுள்ளன (21:23, 24, 28, 29, 30). இங்கு பயன்படுத்துள்ள பதங்களின் முக்கியத்துவம் குறித்து ஆசிரியர் விவரித்துள்ளார். "பெயெர்செபா" என்ற பெயரானது, இரண்டு எபிரெய வார்த்தைகளை உள்ளடக்கியதாயும் בְּאֵר (*b$^{e}$'er,* பீர்) "துரவு" என்ற அர்த்தத்துடனும், மற்றும் שֶׁבַע (*sheba',* ஷெபா) "ஏழு" என்றும் பொருள்படுகிறது. இரண்டு வார்த்தைகளையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது, அவைகள் "ஏழு துரவுகள்" என்று உண்மையான அர்த்தம் தருவதாயும், மேலும் ராஜாவிற்கு கோத்திரத் தலைவன் கொடுத்த ஏழு ஆட்டுக் குட்டிகளையும் குறிப்பதாயும் உள்ளது. இரு மனிதர்களும் ஒரு உடன்படிக்கையை[16] எந்த இடத்தில் உறுதி செய்தார்களோ, அதன் நினைவாக "உடன்படிக்கையின் துரவு" என்றும் கூட அர்த்தம் தருவதாய் உள்ளது.

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக கானானில் வாழ்ந்த பிறகு, இறுதியாக ஆபிரகாமிற்கு சட்டப்பூர்வமாக அங்கே ஒரு துரவு வேண்டும் என்ற ஒரு உரிமைக் கோரிக்கை உள்ளது. இரண்டு மைல்களுக்கு குறைவாக உள்ள இடத்தில், எத்தனைத் துரவுகள் இருந்தன என்பது கண்டுபிடிக்க கஷ்டமானதாயும், மற்றும் காலவரை குறியீடு இல்லாததாலும், ஆபிரகாமுடைய துரவு இருந்த சரியான இடத்தைக் கண்டு பிடிப்பது, சர்ச்சைக்குரியதாயும் மற்றும் நவீன பெயராக டெல் பெயெர்செபா என்றும் வழங்கப்படுகிறது. மேலும், கோத்திரத் தலைவனின் பெயெர்செபா,[17] இந்த இடத்தில் தான் டெல் பெயெர்செபா இருக்கிறதா அல்லது இல்லையா என்பது ஒருவருக்கும் தெரியாது. பூமி அதிர்ச்சிகள், போரின் மூலம் வந்த அழிவு, நீரூற்றுகள் அல்லது துரவுகளின் நீர் வற்றிப்போகுதல், மற்றும் வேறு காரணங்களினாலும், மக்கள் சில நேரங்களில் பழங்கால இடங்களை கைவிட்டு விட்டனர். சில நேரங்களில், குடியிருப்பவர்கள் இடம் பெயரும் போது உண்மையான நகரத்தின் பெயரை புதியதொரு இடத்திற்கு எடுத்துச் செல்கின்றனர். பழங்கால உலகத்திலே, இம்மாதிரியான பல கணக்கில்

அடங்கா “இடமாற்றங்களை,” தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒரு சான்றாக கண்டுபிடித்துள்ளார்கள்.

**வசனம் 32.** ஆபிரகாமோடு உறுதி செய்யும் **பெயெர்செபா உடன்படிக்கையினை** வெற்றிகரமாக உருவாக்கிக் கொண்டு **அபிமெலேக்கும் பிகோலும் பெலிஸ்திய** நாட்டிற்கு திரும்பினர். பெயெர்செபா அவர்களுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லை என்பதனை இச்சொற்றொடர் எடுத்துக்காட்டுகிறது; எனினும் ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் இது அவர்களுடைய எல்லைக்கு மிக நெருக்கமாக இருந்தது, இதன் மீது அவர்கள் ஓரளவு கட்டுப்பாட்டை கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் அங்கு வாழ்ந்த வலிமைமிக்க குலமரபு தலைவரான ஆபிரகாமோடு ஒரு சமாதானமான உறவை பராமரிக்க விரும்பினர்.

அபிமெலேக்கு, பிகோல் மற்றும் கேராரில் வாழ்ந்த பெலிஸ்தியர்களை குறித்து சில விமர்சகர்கள் ஐயங் கொள்கின்றனர். கி.மு. 1200ஆம் ஆண்டு வரை கானான் நாட்டில் அவர்கள் பெருமளவில் வாழ்ந்ததற்கான எவ்வித சான்றுகளும் இல்லாதபடியினால், பெலிஸ்திய நாட்டைக் குறித்த எவ்வித குறிப்பும் காலக் கணக்கிற்கு ஒவ்வாததாய் இருக்கிறது. மூதாதையர் காலத்து[18] கிரேத்தா பாணியில் வரையப்பட்ட ஓவியங்கள், மண்பாண்டங்கள் மற்றும் மதுகிண்ணங்கள் உட்பட கிரேத்தா (“கப்தோர்”; ஆமோஸ் 9:7) தீவு, எகிப்து, கானான் சீரியா மற்றும் மெசப்பொத்தோமியா ஆகிய நாடுகளுக்கிடையில் விரிவான வணிகம் இருந்ததற்கான சான்றுகளை தொல்லியளார்கள் கண்டுபிடித்துள்ளனர். காரியம் இப்படியிருக்கும் பட்சத்தில். ஆதியாகமத்தில் காணப்படும் பெலிஸ்தியர்கள் முதலில் கிரேத்தா தீவாரை விரட்டினவர்களாக இருக்காமல், பிற்பாடு வந்த பெலிஸ்தியர்கள் கானான் நாட்டை பெறுமளவில் கைப்பற்றினர் என்பதற்கு சரியான காரணங்கள் ஏதும் காணப்படவில்லை.

மேலும் இந்த ஆதிகுடிகள் பிற்கால பெலிஸ்தியர்களை விட அரசியல் ரீதியாக மாறுபடுகின்றனர். இவர்கள் ஆபிரகாமோடு ஒப்பந்தம் செய்து கொண்டு சமாதானமுள்ளவர்களாகவும், அந்நியரோடு தொடர்புகொள்வதில் சாதுரியம் உள்ளவர்களாகவும் இருந்தனர்; கேராரில் வாழ்ந்த அவர்கள் ஒரு அரசனால் ஆளுகை செய்யப்பட்டனர். இதற்கு மாறாக பிற்கால பெலிஸ்தியர்கள் ஐந்து பிரபுக்களை கொண்டு ஆளுகை புரிந்த (யோசுவா 13:3; நியா. 3:3; 1 சாமு. 6:16-18)[19] காசா, அஸ்தோத், அஸ்கெலொன், காத் மற்றும் எக்ரோன் ஆகிய ஐந்து பட்டணங்களை (பென்டபொலிஸ்) ஒருங்கிணைத்து போர் வெறி கொண்ட வீரர்களாக இருந்தனர். நியாயாதிபதிகளின் காலத்து பெரும் பகுதி மற்றும் சவுலின் அரசாட்சி காலத்திலும் இஸ்ரவேலர்கள் பெலிஸ்தியர்களின் கைகளில் பெரும் உபத்திரவத்தை அனுபவித்தனர். தாவீதின் பேராட்சி காலத்து பல ஆண்டுகள் வரை அவரது படைகள்

அவர்களை அடிமைப்படுத்தக் கூடாமல் இருந்தது (2 சாமு. 8:1; 1 நாளா. 18:1).

**வசனம் 33.** இரு கூட்டத்தார்களாலும் உடன்படிக்கை செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது, அபிமெலேக்கும் பிகோலும் கேராருக்கு திரும்பினர். ஆபிரகாம் அங்கேயே இருந்து **பெயெர்செபாவில் ஒரு தோப்பை உண்டாக்கினார்**. தெற்கு நெகேவ் பகுதியின் நிழலுக்கு இவ்வகையான தோப்புகள் மிகவும் அத்தியாவசியமானதாக இருந்தது, மேலும் இவைகள் இப்பகுதியின் தட்ப வெப்பத்திற்கு ஏற்றதாகவும் இருந்தது. இவைகள் இருபது அல்லது முப்பது அடிகள் உயரம் வரை வளர்ந்து நிழலை தந்தபடியால், நாடோடிகள் பராம்பரியமாக இத்தோப்புகளை நட்டனர். இவைகள் மந்தையாளர்களுக்கு கூடுதல் மதிப்புமிக்கதாக இருந்தது, ஏனெனில் மந்தைகள் இதன் மென்மையான கிளைகளை உண்ண விரும்பின.[20]

பழைய ஏற்பாட்டில், மரங்கள், சிறப்பாக பசுமையான மரங்கள் வாழ்விற்கும், கனி நிறைவிற்கும் மற்றும் ஆண்டவருடைய ஆசீர்வாதத்திற்கும் உருவகமாக இருக்கின்றன (2:9; 13:10; சங். 1:3; எரே. 17:7, 8; எசே. 47:12). தோப்பை நட்டப் பின்னர் மூதாதையர் ஆபிரகாம் ஆண்டவரை தொழுது கொண்டபடியால், இம்மரத்தை நடுதல் பலிபீடத்தைக் கட்டும் செயலுக்கு ஒப்பாக இருக்கிறதென சிலர் கூறுகின்றனர். பண்டைய கானானியர்கள் மரங்கள், தூண்கள் மற்றும் பலபீடங்கள் ஆகியவற்றை தங்கள் தொழுகையில் பயன்படுத்தினர், இவைகள் கருவுறும் சடங்குகளை இழிவுப்படுத்துதல் தொடர்புடையதாக இருந்தது. இஸ்ரவேலர் புற இனத்தார்களை பின்பற்றும் போக்குடையவர்களாக இருந்தப்படியால், மோசே தனது சட்டங்களில் யாவேயின் தொழுகையில் பரிசுத்த மரங்கள் பயன்படுத்தக் கூடாதென தடை செய்தார் (உபா. 16:21). ஆபிரகாம் எப்போதும் கானானிய திருத்தலங்களை தவிர்த்து, ஆண்டவரை தொழுதுகொள்ள தனக்கென பலிபீடங்களை கட்டிக் கொண்டார், மரங்களை தொடர்புபடுத்தும் கருவுறுதல் சடங்கினைப் பற்றி அவர் அறியாமல் இருந்திருக்க வேண்டும். அப்படி அவர் இந்த பழக்கத்தைப் பற்றி தெரிந்திருந்தாலும், அவர் நாட்டின் அந்த மரம் அவருக்கு தொழுகையின் பொருளாக எந்த முக்கியத்துவமும் பெறவில்லை. ஆண்டுகள் கழிகையில் அது வளர்ந்து யாவேயை தொழுதுகொள்ள ஒரு நிழல் சார்ந்த இடத்தை அவருக்கு தந்திருக்க வேண்டும்.

மற்றொரு வியாக்கியானம் இந்நிகழ்வை இப்படியாக தொகுத்தளிக்கிறது, மூதாதையர் ஆபிரகாம் அவர் விரும்புகிற இடத்தில் தங்கிக் கொள்ள அபிமெலேக்கு அவருக்கு அனுமதியளித்தார் (20:15). பெயெர்செபாவில் இருந்த ஒரு கிணற்றை ஆபிரகாமின் சொத்தாக அங்கீகரித்து அவ்விரு மனிதர்களும் தங்கள் மோதலற்ற உடன்படிக்கையினை முத்திரையிட்டிருந்தனர். மரத்தினை நடுவதனால்

அவரது மந்தைகள் மேய்ந்ததும், அவருடைய பரிவாரங்கள் குடியிருந்ததுமான இடத்தின் மீது உரிமை கோரியிருக்கக்கூடும்.

இந்த வியாக்கியானத்தில் இருக்கும் கடினம் என்னவெனில் ஆபிரகாமிற்கும் அபிமெலேக்கிற்கும் ஏற்பட்ட உடன்படிக்கை மோதலற்ற ஒப்பந்தமாக காணப்பட்டு மூதாதையர் ஆபிரகாமை ஒரு நில உரிமையாளராக அல்லாமல் நாட்டில் பரதேசியாய் (சில காலம் தங்குபவராக; 21:23) சமாதானமாய் தங்க அனுமதித்தது. சமாதான ஒப்பந்தத்தை உறுதி செய்த பின்னர் அந்த அரசர் ஒரு பிரமாணத்தை ஏற்படுத்தி அவருடைய கட்டுப்பாட்டின் கீழிருந்த ஒரு பெரும் நிலத்தின் மீதல்லாமல் ஆபிரகாமின் மனிதர் தோண்டின கிணற்றின் மீது மட்டுமே உரிமைகொண்டாடுவதனை விலக்கிக் கொண்டார் (21:30, 31). மேலும் மூதாதையர் ஆபிரகாமை "அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, கூடாரங்களிலே குடியிருந்தான்" (எபி. 11:9) என புதிய ஏற்பாடு சித்தரிக்கிறது. ஸ்தேவான் ஆபிரகாமைக் குறித்து "இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் கையாட்சிக்கு கொடுக்கவில்லையென" கூறுகிறார் (அப். 7:5).[21] ஐயப்பாட்டிற்கு இடமின்றி, ஒரு கிணறு என்பது ஒரு அடி நிலமாகாது; மாறாக அதின் மீது நிற்க கூடாதபடி அது பூமியின் மீது ஒரு துளையாக இருக்கிறது.

அந்த புதிய மரமானது கிணற்றின் உரிமையைக் குறித்து இருவரும் ஏற்படுத்திக் கொண்ட உறுதி மொழி பிரமாணத்திற்கு ஒருவேளை வெறும் அடையாளமாக இருக்கலாம். இயல்பாகவே ஆபிரகாம் நன்றி நிறைவுடன் **சதாகாலமுமுள்ள** (אֵל עוֹלָם, *'El 'Olam*, எல் ஓலம், நித்திய தேவன்) **தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுதுகொண்டார்.** ஒரு நாள் பிறந்து மரணத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிற கட்டுக் கதைகளை சார்ந்த புற இன கடவுள்களை போன்றல்லாமல், ஆண்டவர் தொடக்கமும் முடிவுமற்ற நித்தியமான தேவன் என்பதனை ஆபிரகாம் அறிந்திருந்தார். பூமியின் சந்ததிகளை ஆபிரகாமின் மூலமாய் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணி, ஆண்டுகள் பல கழிகையில் கடினமான பாடுகளில் அவரை பாதுகாத்து, பராமரித்து வந்த அவர் சர்வ வல்லமையுள்ள ஆண்டவர் *எல்-ஷடாய்* (17:1). இயல்பான இனப்பெருக்கத்திற்கு அவர்களின் உடல் செத்திருக்கையில் அவரையும் அவருடைய மனைவி சாராளையும் யாவே புதுப்பித்து வாழ்வளித்திருந்தார்; தற்போது அவர்கள் நலம் நிறைந்த மகனாகிய ஈசாக்கைப் பெற்றிருந்தனர். இறுதியாக இந்த நிகழ்வில் ஆண்டவர் அபிமலேக்கின் இருதயத்தை தொட்டு கானான் நாட்டில் அந்நியராக இருந்த ஆபிரகாமிற்கு தயை காட்டும்படி செய்தார். நன்றியுணர்வு நிறைந்த இருதயத்துடன், ஆபிரகாம் சதாகாலங்களிலும் உள்ள யாவேயை தொழுது கொண்டார்.

**வசனம் 34.** வேதாகம ஆக்கியோன் மூதாதையர் ஆபிரகாம்

வாழ்வில் நிகழ்ந்த இந்த நிகழ்வை **ஆபிரகாம் பெலிஸ்தருடைய தேசத்தில் அநேக நாள் தங்கியிருந்தான்** என சுருங்கக் கூறுகிறார். இச்சமயத்தில் "பெலிஸ்தியர்களின் நாடு" கானான் நாட்டிற்கு தென்கிழக்காக ஒரு வரையறுக்கப்பட்ட எல்லையை கொண் டிருக்கவில்லை என்பது திண்ணம். அதனால் தான் அபிமெலேக்கும் பிகோலும் பெயெர்செபாவை விட்டு "பெலிஸ்திய நாட்டிற்கு திரும்பினர்" (21:32). வேறு விதத்தில் கூறுவதென்றால் ஆபிரகாம் வாழ்ந்த பகுதி அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தது; அவர் பெலிஸ்திய பகுதியில் சில காலம் வாழ்ந்தார். "தங்கினார்" (גּוּר, *gur,* கர்) என்பது அவர் "அந்நியராக" அல்லது "குடியிருக்கும் பரதேசியாக" தொடக்கக் கால பெலிஸ்தியருக்கருகில் தொடர்ந்து வாசம் செய்தார் என பொருள்படுகிறது.

## நடைமுறை

### ஆபிரகாம், சமாதானம் உண்டுபண்ணுகிறவர்

### (அதிகாரங்கள் 20; 21)

ஆண்டவர் தமது மக்களை "சமாதானம் பண்ணுகிறவர்களாக" இருக்க எப்போதும் விரும்புகிறார், இயேசு அப்படிப்பட்டவர்களை ஆசீர்வதித்திருக்கிறார் (மத். 5:9). அதற்காக அதனை எவ்விலை கொடுத்தாகிலும் சமாதானத்தை தேட வேண்டும் என பொருள் கொள்ளக்கூடாது அல்லது சமாதானமாக இருக்க நமது கோட்பாடுகளை சமரசம் செய்துகொள்ள வேண்டும் என்பதும் பொருளாகாது. நாம் எல்லா சமயத்திலும் அடங்கிப் போக வேண்டிய அவசியமில்லை; நம்மையும் நமது இல்லத்தையும் அச்சுறுத்தும் தீமையை எதிர்த்து போராடுதல் அவசியமாகும். "கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்," ஒருவரையும் "பழிவாங்காமல்" இருங் களென பவுல் எழுதியிருக்கிறார் (ரோமர் 12:18, 19). பண்டைய காலந்தொட்டு மனித அரசாங்கம் இருந்தாலும் அல்லது அரசாங்கம் தனது மக்களை தீயோரிடமிருந்து பாதுகாக்க இயலாத நிலையில் இருந்தாலும் (ரோமர் 13:1-7 காண்க) எப்படியாயினும் ஆண்டவர் தமது பழிதீர்த்தலை செயல்படுத்த தனி நபரையோ அல்லது குழுவினரையோ பயன்படுத்துகிறார் (9:5, 6).

சரியான வழியில் எப்போதும் இல்லையென்றாலும், ஆபிரகாம் ஒரு சமாதானம் பண்ணுகிறவராக இருந்தார். தனது பாதுகாப்பை கருதி இருமுறை அவரது மனைவியைப் பற்றி பொய் கூறினார். ஒருமுறை எகிப்திலுள்ள பார்வோனிடம் கூறினார் (12:10-20) மற்றொரு முறை கேராரில் அபிமெலேக்கிடம் கூறினார் (20:1-18). அவர் வாழ்வை ஆபத்தானதாக்குவதை விட இந்த இரு புற இன அரசர்களின்

இச்சைகளுக்காக அவரது மனைவியை பலியாக்கவே விரும்பினார். நாம் ஏற்கனவே பார்த்தபடி ஆபிரகாம் செல்வ செழிப்பான தலைவராக இருந்தார், அவர் 318 போர் வீரர்களைக் கொண்ட தனிப்படையொன்றை வைத்திருந்தார் (14:14), மேலும் ஒரு வேளை அந்த எண்ணிக்கை ஆண்டுகள் கடக்கையில் இருமடங்காக உயர்ந்திருக்கக்கூடும். ஒருவேளை அவர்களுடைய கோரிக்கைக்கு ஆபிரகாம் செவிமடுத்திருக்காவிட்டால் அந்த அரசர்கள் அவரோடு போர் புரிந்திருக்கமாட்டார்கள். எப்படி யாயினும் அவர் ஒரு கோழைத்தனமான முடிவை எடுத்து அவரை பாதுகாத்துக் கொள்ள பொய் கூறினார்.

ஆனால் 14ஆம் அதிகாரத்தில் கிழக்கத்திய அரசர்கள் நான்கு பேர் யோர்தான் பள்ளத்தாக்கை கைப்பற்றுகையில் அவர் தமது துணிவை காட்டினார். அவர்கள் ஒருங்கிணைந்த ஐந்து அரசர்களை வென்று, லோத் மற்றும் அவருடைய குடும்பத்தினர் உட்பட பலரை சிறைப்பிடித்தார்கள். இச்சமயத்தில் ஆபிரகாம் மூன்று எமோரிய சகோதரர்களுடன் ஏற்கெனவே பாதுகாப்பு கூட்டணியை உண்டுபண்ணியிருந்தார். அவர்களின் ஒருங்கிணைந்த படை ஒரு பெரும் படையாக இல்லையென்றாலும் அவர்கள் சரியாக திட்டமிட்டால் வெற்றி பெறக்கூடும். ஆகவே அவர்கள் இரவில் பதுங்கியிருந்து தாக்கி கிழக்கத்திய அரசர்களை தோல்வியடையச் செய்து, சிறை பிடிக்கப்பட்டவர்களையும், அவர்களது சொத்துக் களையும் மீட்டனர். இந்த நிகழ்வில் லோத்து அவருடைய குடும்பத்தார் மற்றும் தீங்கினால் பாதிக்கப்பட்டோரை மீட்கப் போரிட வேண்டியதாயிருந்தது. தீர்க்கமான போரின் மூலம் அவர் போரிட்டு, வெற்றி பெற்று சமாதானம் பண்ணுகிறவரானார்.

அதிகாரம் 14ல் ஆயுதம் ஏந்தியது சட்டத்திற்கு அப்பாற் பட்டதாக இருந்தது. மூதாதையர் ஆபிரகாம் வாழ்வில் இப்படிப் பட்ட நிகழ்வை வேறெங்கும் காண இயலாது. ஆபிரகாமின் மனிதருக்கும் பெலிஸ்தியருக்கும் இடையே அபிமெலேக்கும் பிகோலும் மோதலற்ற ஒப்பந்தத்தின் சமாதான அங்கீகாரத்திற்காக அவரை அணுகியபோது அதற்கு மூதாதையர் உடனே இணங்கினார். அவருடைய மனிதர் தோண்டின கிணற்றை ஒப்படைக்க வேண்டுமென்கிற ஒரே ஒரு சலுகையை மட்டுமே அவர் கோரினார்; அதற்கு அந்த அரசரும் இணங்கினார். ஆபிரகாமிற்கு இப்படி ஒரு திட்டம் அபிமெலேக்கினால் அளிக்கப்படுவது அசாதாரணமானதாகும், ஏனெனில் ஆபிரகாமின் பரிவாரங்கள் வளர்ந்து பலப்படுவதனை கண்டு அவர் அச்சமுற்றார் எனும் கருத்தினை அது தெரிவிக்கிறது மேலும் அவர் செய்த எல்லா காரியத்திலும் ஆண்டவர் மூதாதையர் ஆபிரகாமோடு இருக்கிறார் என்பதனை அங்கீகரிக்கிறது (21:22).

இந்த புற இன அரசரோடு ஒரு சமாதான ஒப்பந்தத்தில்

ஈடுப்பட்டதின் மூலம் அவர் தனது விசுவாசத்தோடு சமரசம் செய்து கொள்ளவில்லை, பிற்பாடு வந்த இஸ்ரவேல் மற்றும் யூதா அரசர்களும் இதைப் போன்ற ஒப்பந்தங்களில் ஈடுபட்டனர். மூதாதையர் ஆபிரகாமும் அபிமெலேக்கும் ஒப்பந்தத்தை முடித்தவுடன் ஆபிரகாம் சதா காலங்களிலும் உள்ள ஆண்டவரை தொழுது கொண்டார் (21:33). மோதலற்ற ஒப்பந்தத்தையும் (சமாதான ஒப்பந்தம்) ஆண்டவரை தொழுதலையும் இணைப் பதென்பது யாவே அவரை சமாதானம் பண்ணுகிறவராக ஆசீர்வதித்தார் என்பதனை காட்டுகிறது.

இவ்வுலகத்திற்கு "சமாதான பிரபுவாக" இயேசு வந்தார் (ஏசாயா 9:6), அவருடைய பிறப்பின் போது தேவதூதர்கள் "பூமியிலே சமாதானம் ...." என கூறினார்கள் (லூக். 2:14). அழிக்கும், கொல்லும், அடிமைப்படுத்தும், மக்களை அடிமைப்படுத்தி ஒடுக்கும் படைகளின் மூலம் கிறிஸ்து இந்த சமாதானத்தை பெறவில்லை. இறுதி வாரத்தின் போது எருசலேமில் இயேசு நுழைகையில் போர் குதிரையின் மீதோ, அல்லது இராணுவ இரதத்தின் மீதோ ஏறி வராமல் பொதி சுமக்கும் கழுதையின் மீதேறி வந்தார். எருசலேமினின்று குதிரைகளையும் அற்றுப்போகப்பண்ணுவேன், யுத்த வில்லும் இல்லாமற்போகும், அவர் ஜாதிகளுக்குச் (புற இனத்தாருக்கு) சமாதானம் கூறுவார் என கூறும் சகரியா 9:9, 10 ஆகிய வசனங்கள் நிறைவேறும்படியாக வந்தார். இது யூதர்கள் விரும்பின அல்லது ரோமர்கள் எதிர்பார்த்த மேசியாவினை போன்றதாக இது இல்லை (யோவான் 18:33-38). அவருடைய அரசை பரப்புவதற்கு ஆண்டவருடைய பிள்ளைகள் பட்டயத்தை பயன்படுத்துவதனை அவர் தடை செய்தார் (மத். 26:52).

இயேசு அவரது பகைவர்களை அழிக்க வராமல், அவர்களை தேடவும் இரட்சிக்கவுமே வந்தார் (லூக். 19:10). அவர் மனமுவந்து உலகின் பாவத்திற்காக மரித்தபடியால் அவர்களுடைய இருதயம் இளகச் செய்து இதனைச் செய்தார் (யோவான் 1:29; 3:16). சிலுவையில் அறையுண்ட மீட்பரின் மூலமாய் ஒரு புதிய பாதையில் பெருக்கெடுத்து ஓடும், சிலுவையண்டையில் இழுத்துக் கொள்ளும் வல்லமையிதுவேயாகும் (யோவான் 12:31-33).

எப்படியாயினும் சிலுவையானது முடிவாயிராமல், முடிவிற்கு வழியாக இருக்கிறது, இயேசு மரித்ததின் மூலம் மரணம் இறுதியான வார்த்தையாக இருக்கவில்லை என்பதனை விளங்கப்பண்ணினார். அவருடைய மகிமையான உயிர்த்தெழுதல் மேசியாவின் சமாதான ஆட்சியான ஜீவனுக்கு ஒரு புதிய யுகத்தை உண்டாக்கியது. சமாதானம் என்பது இயேசு கிறிஸ்துவின் மூலமாகக் கொடுக்கப்பட்ட பெரும் கட்டளையின் நற்செய்தியாகும் (அப். 10:36-43). தங்களுக்குள்ளே போர் புரிகிறவர் களுக்கும், அயலகத்தாரோடு போர் புரிகிறவர்களுக்கும், பகைவரோடு போர்புரிகிறவர்களுக்கும் அல்லது ஆண்டவரோடு போர் செய்கிறவர்களுக்கும் ஒரு மீட்பர் இருக்கிறார் அவரே நமது

சமாதானமாக இருக்கிறார் (எபே. 2:13-18). எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்தை அவர் தருகிறார் (பிலி. 4:7) கடந்த காலங்களில் ஆபிரகாமும் மற்றவர்களும் அனுபவித்த சமாதானமானது வாக்குப்பண்ணப்பட்ட மூதாதையர் ஆபிரகாமின் வித்தாகிய (வழிமரபாகிய) இயேசுவின் உண்மையான சமா தானத்தின் மங்கலான முன்னனுபவமாக இருந்து (கலா. 3:8, 16, 26-29) தற்போது அவருடைய ஆவிக்குரிய வழிமரபாகிய நமக்கு இப்போதும் எப்போதும் சமாதானத்தை அருளுகிறது.

## ஈசாக்கை சுற்றியிருந்தவர்களின் பதில் செயல்கள் (21:8-19)

பொறாமை, ஏளனம், சினம், கவலை, சோர்வு மற்றும் நம்பிக்கை: ஈசாக்கு பிறந்த பின்னர் இருந்த குடும்ப சூழலில் ஆபிரகாமின் குடும்பத்தினர் இவ்விதமான வெவ்வேறு உணர்வுகளைக் கொண்டிருந்தனர். வாக்குப்பண்ணப்பட்ட பிள்ளை வளருகையில் அதற்கு எதிராக ஒரு எதிர்மறையான பண்பை இஸ்மவேல் காண்பித்தார்.

*இஸ்மவேலின் பதில் செயல்: பொறாமை மற்றும் ஏளனம்* (21:8, 9). இஸ்மவேலுடைய புதிய செயலான பொறாமை ஒருவேளை எஜமாட்டியின் மேல் பல வருடங்களாக பொறாமை கொண்டிருந்த அவருடைய தாயாராகிய ஆகாரால் உற்சாக மூட்டப்பட்டிருக்கக் கூடும். சாராள் வாக்குப்பண்ணப்பட்ட பிள்ளைக்கு தாயான பிறகு இறுக்கம் இன்னும் அதிகமானது. அடிமையின் மகனாக இருந்தாலும் ஆபிரகாமின் ஒரே மகனாக இருக்கும் பட்சத்தில் இஸ்மவேல் பெறப் போகிற அனைத்து சுதந்திரத்திற்கும் இந்த குறு நடைபோடும் குழந்தை சுதந்திரவாளியாக நியமிக்கப் பட்டிருக்கிறான். பதினாறு அல்லது பதினேழு வயது நிரம்பிய சிறுவன், மூன்று வயது நிரம்பிய ஒரு குழந்தையை ஏளனம் செய்வதும், வேதனைப்படுத்துவதும் இஸ்மவேலின் எவ்வளவு திமிர் பிடித்த செயலாக இருக்கிறது! அவன் துஷ்ட மனுஷனாயிருப்பான், அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும் எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும் என்று இஸ்மவேலைக் குறித்து ஆண்டவர் ஏற்கெனவே முன் னுரைத்திருந்தார் (16:12). அந்த பண்பை அவர் சிறுவனாக இருக்கும் போதே செயல் முறைப்படுத்த தொடங்கிவிட்டார்.

இளம் ஈசாக்கிற்கு இஸ்மவேலின் பதில் செயலானது மாம்சத்தின் கிரியைகளுக்கும், ஆவியின் கனிக்கும் இடையேயுள்ள அடிப்படை முரண்பாட்டை சித்தரிக்கிறது. இதைப் போன்ற ஒரு போர் காயீனுடைய பொறாமையினால் வெடித்து இறுதியில் அவருடைய சகோதரனாகிய ஆபேலின் கொலைக்கு முன் நடத்தியது (4:3-8). பவுல் பிற்காலத்தில் இதனைப் போன்ற வெளிப்புற போர்களில் நிறைவுபெரும் பொறாமை மற்றும் எரிச்சலின் பண்பினுடைய உட்புற பண்பாகிய மாம்சீக

கிரியைகளைக் குறித்து தெளிவான பட்டியலை தொகுத் தளித்திருக்கிறார் (கலா. 5:19-21). இந்த அப்போஸ்தலர் இப்படி நியாயந்தீர்ப்பதின் காரணம் என்னவெனில் இவ்வகையான உட்புற பண்புகள் சோதிக்கப்படாமல் போகுமெனில் அவைகள் எப்போதும் உறவுகளை அழித்துப் போடும்.

யாக்கோபின் மனைவியாகிய ராகேல் மலடியாயிருந்து, யாக்கோபிற்கு பிள்ளைப் பெற தகுதியாக இருந்த லேயாள் மீது பொறாமை கொண்டார். ராகேல் அவரது கர்ப்பந்தரிக்கும் இயலாமையைக் குறித்து யாக்கோபை குற்றஞ்சுமத்துகையில், அப்பொழுது யாக்கோபு ராகேலின்மேல் கோபங்கொண்டு: தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா? என்றான் (30:2). யோசேப்பின் சகோதரர்கள் அவர்களது தந்தையாருக்கு பிடித்த மகனுடைய திமிரை இனியும் தாங்கிக் கொள்ள இயலாத போது, அவர்களது கசப்பு வெளிப்படையான போராக மாறி யோசேப்பின் கொலை செய்யும் அச்சுறுத்தலில் நிறைவு பெற்றது.

பொறாமையும், எரிச்சலும் போராட்டத்தையும் இதய வலியையும் கொண்டு வந்து மண வாழ்விலும் குடும்பத்திலும் அழிவை கொண்டு வருவதுமட்டுமில்லாமல், வாழ்வின் பல பகுதிகளிலும் அழிவைக் கொண்டு வருகிறது. யூத தலைவர்களின் இப்படிப்பட்ட அணுகுமுறையே இயேசுவைக் கொலை செய்யக் காரணமாக இருந்தது (மத். 27:18; மாற்கு 15:10), மேலும் ஆதி சபைகளின் ஆவிக்குரிய வாழ்விற்கு அச்சுறுத்தலாக இருந்து வேறுபாட்டிற்கும் அவர்களை முன்னெடுத்தது (1 கொரி. 3:3; 13:4; கலா. 5:26; பிலி. 1:15; 2:3; யாக். 3:14-16; 1 பேதுரு 2:1, 2 ஆகியவற்றைக் காணவும்). இப்படிப்பட்ட சாவுக் கேதுவான தாக்கங்களை குறித்து ஆண்டவருடைய பிள்ளைகள் எப்போதும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

*சாராளின் பதில் செயல்: சினமும் பகைமையும்* (21:10). ஈசாக்கை இஸ்மவேல் ஏளனப்படுத்தி[22] இகழ்ந்து பேசியதை சாராள் கேள்விப்பட்டவுடன் அவளுடைய எதிர்செயல் தூண்டப்பட்டது. அந்த சிறுவனின் சொல்லையும் செயலையும் ஆபத்து நிறைந்ததாக எண்ணி அவருடைய மகனின் எதிர்காலத்திற்கு கேடு விளைவிக்கும் அறிகுறியாக பொருள் விளக்கம் தந்தார். இங்ஙனம் மதிப்பீடு செய்வதில் சாராள் ஒருவேளை சரியாக இருந்திருக்கக்கூடும்; சினங் கொண்டு. அவர் அவரது கணவர் ஆபிரகாமை நோக்கி: இந்த அடிமைப்பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும். இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை என கூறினார் (21:10). தனது மகனின் பாதுகாப்பிற்காக அடிமைப் பெண்ணையும் அவருடைய மகனையும் “புறம்பே தள்ளும்” (மணமுறிவு) என அவரது கணவரிடம் கோரினதை அவர் நியாயப்படுத்தியிருக்கக்கூடும். எப்படியாயினும் ஆகார் மற்றும்

அவருடைய மகனின் மேல் பொறாமையையும், எரிச்சலையும் ஆண்டுக் கணக்கில் வளர்த்து, அவரை விட்டு அவர்கள் இருவரையும் துரத்துவதற்கு இந்நிகழ்வை சாதகமாக்கிக் கொண்டார்.

*ஆபிரகாமின் பதில் செயல்: துயரமும் வருத்தமும்* (21:11-14). அவரது முதல் மகனான இஸ்மவேலை அவர் நேசித்தபடியால் சாராளின் கோரிக்கைக்கு ஆபிரகாம் துயரத்தோடும் (21:11) வருத்தத்தோடும் மறுமொழி கொடுத்தார். இந்த இரு பெண்மணிகளின் நடுவேயுள்ள அமைதியற்ற சூழலை நிச்சயமாக நன்கறிந்தவராக இருந்தார், எப்படியாயினும் இந்த போட்டிபோடும் பெண்மணிகளையும், அவர்களுடைய மகன்களையும் ஒரு குடும்பமாக இருக்க வலியுறுத்துவது, அவருடைய மண வாழ்விலும் குடும்ப வாழ்விலும் ஒருபோதும் சமாதானத்தை கொண்டு வராதென்பதனை தற்போது அவர் உணர்ந்தார். அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி: அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்க வேண்டாம், ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும், ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள், என கூறி ஆண்டவர் மூதாதையர் ஆபிரகாமிற்கு இதனை உறுதிப்படுத்தினார் (21:12). அடிமைப் பெண்ணின் மகனும் உன் வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு ஜாதியாக்குவேன் என கூறி மூதாதையர் ஆபிரகாமிற்கு ஆண்டவர் மறு உறுதியளித்தார் (21:13).

தெய்வீக கட்டளை மற்றும் வாக்குத்தத்தத்தின் சூழல் ஆபிரகாமின் பின்வரும் செயலை நமக்கு புரிய வைக்கிறது. ஆகாரையும் இஸ்மவேலையும் ஒரு நாளுக்கும் குறைவான உணவையும் தண்ணீரையும் கொடுத்து வனாந்திரத்திற்கு அனுப்பிவிடுகையில் அவர் புத்தியற்றவராகவோ அல்லது இரக்கமற்றவராகவோ இருக்கவில்லை. ஆண்டவர் தமது வாக்கில் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பதனை அவரது அனுபவத்தின் வழியாய் கற்றிருந்தார். முதல் முறை ஆகார் வனாந்திரத்திற்கு ஓடினபோது கர்த்தருடைய தூதனானவர் அவரை அவருடைய நாச்சியாரிடத்திற்கு திரும்பிச் செல்ல கூறினதை ஆபிரகாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். மேலும் ஒரு மகனைப் பெறுவாயென்றும் அந்த குழந்தையும் ஒரு பெரிய வழிமரபாக மாறும் என்றும் அவர் ஆகாருக்கு கூறியிருந்தார் (16:7-14). மேலும் ஆண்டவர் இஸ்மவேலை “பன்னிரெண்டு பிரபுக் களுக்கு தகப்பனாகவும்” ஒரு பெரும் ஜாதியாகவும் மாற்றி ஆசீர்வதிப்பேனென ஆபிரகாமிற்கு வாக்குப்பண்ணியிருந்தார் (17:20). இஸ்மவேலின் எதிர்காலத்தை குறித்த வாக்குத்தத்தங்களை ஆண்டவர் மீண்டுமாக எடுத்துரைக்கையில் (21:13), ஆபிரகாம் தயக்கம் காட்டவில்லை. ஆண்டவர் அவர்களை வனாந்திர சூழலில் பாதுகாத்து பராமரிப்பார் எனும் நம்பிக்கையுடன் அவர் அவர்களை சொற்ப உணவுடன்

அனுப்பிவிட்டார் (21:24).

*ஆகாரின் பதில் செயல்: விரக்தி பின்னர் மகிழ்வு* (21:15-19). ஆபிரகாமைப் போன்று நம்பிக்கையுடையராக ஆகார் காணப் படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னர் வனாந்திரத்தில் ஒரு நீரூற்றைக் கண்டு அங்கே தேவ தூதன் அவருக்கு காணப்பட்டு அவருடைய மகனின் எதிர்காலத்தைக்குறித்தும் அவரது வழிமரபுகளைக் குறித்தும் கூறினது மறந்திருக்கக்கூடும் என்பது வெளிப்படையாக இருக்கிறது (16:7-14). இம்முறை நண்பகலில் அவர்களுடைய தண்ணீர் தீர்ந்துபோனபோது, கலக்கமுற்ற தாய் அவருடைய மகனை ஒரு புதரின் கீழ் வைத்து விட்டு பிள்ளை சாவதைக் காணக்கூடாமல் ஆண்டவரை நோக்கி கூப்பிட்டார் (21:16). மீண்டுமொருமுறை பரலோகத்திலிருந்து தேவ தூதன் பேசினார். அவர் சிறுவனின் அழுகுரலை கேட்டார், இஸ்மவேல் வமிமரபை பெரும் இனமாக்கும் வாக்குத்தத்தத்தை மறுபடியும் உறுதிப்படுத்தினார் (21:17, 18). அவர்கள் இளைப்பாறும் வண்ணமாக ஒரு கிணற்றை ஆகாருக்கு காண்பித்தார்.

இது ஆண்டவர் தமது வாக்கில் *உண்மையுள்ளவர்* என்பதனை விவரிக்கும் மேலும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அவர் மீது *நம்பிக்கை* கொள்ள அவர் அவரது பிள்ளைகளின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண விரும்புகிறார். ஆபிரகாம் மற்றும் அவரது குடும்பத்தினரின் வழியாய் காலாக்காலங்களுக்கு அவர் பெரும் திட்டமொன்றை வகுத்திருக்கிறார்; ஆனால் அதில் ஈடு பட்டிருப்பவர்கள் தங்கள் சொந்த நலனை மட்டுமே பார்த்தனர். நமக்கு அப்பால் இருக்கிற ஆண்டவருடைய பெரும் திட்டத்தினை பார்க்க நாம் எவ்வளவு தவறிவிடுகிறோம்!

---

இறுதிக் குறிப்புகள்

[1]Gordon J. Wenham, *Genesis 16—50*, Word Biblical Commentary, vol. 2 (Dallas: Word Books, 1994), 80–81. [2]E. A. Speiser, *Genesis*, The Anchor Bible, vol. 1 (Garden City, N.Y.: Doubleday & Co., 1964), 155. 1 சாமு. 1:22-24 கையும் 2 மக்கபேயர்கள்: 7:27 ஐயும் காண்க. [3]இஸ்மவேல் பிறக்கும் போது ஆபிரகாம் எண்பத்தெட்டு வயதாக இருந்தார் (16:16) மேலும் ஈசாக்கு பிறக்கும் போது அவர் நூறு வயதாக இருந்தார் (17:17; 21:5) அப்போது இஸ்மவேல் தோராயமாக பதினான்கு வயதாக இருக்கக்கூடும் (17:24, 25 காண்க). மூன்று ஆண்டுகள் கழித்து ஈசாக்கு பால் மறக்கையில் இஸ்மவேல் ஒரு வேளை பதினாறு அல்லது பதினேழு வயதாக இருக்கக்கூடும். [4]J. Barton Payne, "צָחַק," in *TWOT*, 2:763. [5]Kenneth A. Mathews, *Genesis 11:27—50:26*, The New American Commentary, vol. 1B (Nashville: Broadman & Holman Publishers, 2005), 269. [6]Helmer Ringgren, "גָּרַשׁ," in *Theological Dictionary of the Old Testament*, trans. John T. Willis and Geoffrey W. Bromiley, ed. G. Johannes Botterweck and Helmer Ringgren (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1978), 3:68–69. [7]முழு வளர்ச்சியடைந்த வெள்ளாட்டுத் தோல் மூன்று கேலன் தண்ணுரைக் கொள்ளத்தக்கதாகவும் பவுண்ட் நிறை உள்ளதாகவும் இருந்தது. [8]தெற்கு இஸ்ரவேல் மற்றும் சீனாய் தீபகற்பம் ஆகிய பகுதிகளில் கொடூரமான சூழலில் வனாந்திர மலையேற்றம் செய்பவர்கள் உயிர் வாழ்வதற்கு ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் இரண்டு

கேலன் தண்ணீர் கண்டிப்பாக குடிப்பது அவசியமென அனுபவம் பெற்ற வழிகாட்டிகள் தகவல் தெரிவிக்கின்றனர். [9]Walter C. Kaiser, Jr., Peter H. Davids, F. F. Bruce, and Manfred T. Brauch, *Hard Sayings of the Bible* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1996), 123. [10]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 284.

[11]Ibid., 285. [12]Wenham, 91. [13]Frederick W. Bush, "Hurrians," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:784–85. [14]Wenham, 91–92. [15]E. Kutsch, "כרת," in *Theological Lexicon of the Old Testament*, trans. Mark E. Biddle, ed. Ernst Jenni and Claus Westermann (Peabody, Mass.: Hendrickson Publishers, 1997), 2:636. [16]Jack P. Lewis, "בְּאֵר שֶׁבַע," in *TWOT*, 1:87. "பெயெர்செபா" எனும் பெயரின் இரண்டாம் பொருள் ஆதியாகமம் 26:31-33ல் காணப்படுகின்றது. [17]Victor P. Hamilton, *The Book of Genesis: Chapters 18—50*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1995), 93. [18]K. A. Kitchen, *On the Reliability of the Old Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 2003), 340–41. [19]Hamilton, 94. [20]Wenham, 94.

[21]எபிரோனில் சாராளை புதைக்கும்படியாக ஆபிரகாம் விலை கொடுத்து வாங்கின மக்பேலா குகையானது மூதாதையர் ஆபிரகாமிற்கு ஆண்டவர் அருளின சுதந்திர பரிசின் ஒரு பகுதியாக இருக்கவில்லை (23:1-20 காண்க). [22]இஸ்மவேல் ஈசாக்கை உபத்திரவப்படுத்தினார் என்பதாக பவுல் வசனத்தைப் புரிந்துக் கொண்டார் (கலா. 4:29); எனினும் அது மன ரீதியான உபத்திரவமோ அல்லது உடல் ரீதியான உபத்திரவமோ அல்லது இரண்டு விதமான உபத்திரவமோ என்பதனை குறித்து எடுத்துரைக்கவில்லை.